www.tamilarangam.net

# அ ஆ இ

a aa ie



## புகலிட சிறுகதைகள் சிறப்பிதழ்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# அழகி

அவசரமாய் உலகம்! நேரமும் செயலும் குறுக்கப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் காலம். எழுத்து மறந்து போகுமோ என்ற வேகத்தோடு தொடர்பு சாதனங்கள். படங்களும் ஒலியும் எல்லாவற்றையும் சொல்லி விடுகின்றன. இந்த மேலை நாடுகளில் சிறுகதைகள் எங்கே மறைந்து போய் விடுமோ என்ற அச்சம் மேலெழுகிறது. எனினும் தமிழின் சிறுகதைகள் இன்னும் அதன் உச்சத்தை நோக்கி நிற்கின்றன. பல்வேறு கால, பல்வேறு சமூக நிகழ்வுகளின் சுவடுகள் அழிந்து விடாது கதைகளில் சொல்லி வைக்கப் பட்டதாலேயே – ஐந்து வயதில் கைம்பெண்ணாகிய குழந்தையின் வாழ்வும் (அ.மாதவையா) தமிழ் நாட்டின் தண்ணீர்த் தாகமும் (சுந்தர ராமசாமி) சாதி இருள் மூடிக்கிடந்த அந்தக்காலத்திலும் துணிவுடன் மணம் முடித்தமையும் (என்.எஸ்.எம்.ராமையா) – எங்களில் இன்றும் உயிர்ப்புடன்! இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு . . . .

இன்றைய வரலாற்றில் தமிழ்மக்களின் இடப்பெயர்வும் அதனால் இலக்கியப் படுத்தப்படும் காட்சிகளும் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் சேர்த்து வரும் புதிய பொலிவுகள் குறித்துக் கொள்ளப் படவேண்டியவை.

www.tamilarangam.net

ராஜேஸ், தேவகி, லோகா, கலாமோகன், கருணாகரமூர்த்தி, சுகன், சுசீந்திரன், கலைச்செல்வன், சாள்ஸ் . . . . என்று தமிழுக்கு வேண்டிய அவ்சியமான வரவுகள் தான். ஐரோப்பிய புகலிடவாழ்வின் தொழில் முறை அனுபவங்கள், குடும்ப உறவுகள், தனிமனித உறவுகளின் ஆசாபாசங்களில் ஏற்படும் உணர்வுக் கோலங்களை, மனவிகாரங்களை, முரண்பாடுகளைச் சித்தரிக்கும் கதைகள் இவை. பெண்நிலைவாதச் சிந்தனைகளின் வியாபகம், எமது கலாசார விழுமியங்கள் அந்நியக் கலாசாரங்களை எதிர்கொள்ளுதல், மனித விழுமியங்களைத் தொலைத்து விட்டுச் சிரிக்கும் அராஜகங்கள், தொழில் என்ற பெயரில் ' நரகத்தில் இடர்ப் படும் ' அவலங்கள், புகலிட வாழ்வில் பாலியல் தேவைகளின் பிறழ்வுகள், ஐரோப்பியக் குழந்தைகளின் வித்தியாசமான வாழ்வுலகு போன்ற பல்வேறு இழைகளில் பின்னப்பட்ட கதைகள் இவை.

இச் சிறப்பிதழ், இன்றைய புகலிடச் சிறுகதைகளின் போக்கினை ஒரு பரந்த வீச்சில் அவற்றின் காத்திரமான தன்மைகளைக் கோடி காட்டி நிற்கிறது. தமிழகம், ஈழம் என்கின்ற பரப்புக்கு அப்பால் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழர் வாழ் நிலங்களில் முற்றிலும் புதிய அனுபவங்களைக் கொண்டு சேர்த்திருக்கும் இச் சிறுகதைகள் தமிழ் சிறுகதைப் பரப்பிற்கு மேலும் வளம் சேர்க்கின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளாக அ.ஆ.இ தனது தடங்களை அரசியல் , அறிவியல் சிந்தனைகள் பெண் நிலைக் கருத்துக்கள் போன்றவற்றுடனும் அது சிருஷ்டி இலக்கியத்திலும் அதன் பாதையில் அவற்றுக்குக் களம் அமைப்பதையும் ஒரு முக்கிய இலக்காகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளது.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாகக் காட்டிய ஈடுபாட்டினதும் அக்கறையினதும் ஒரு நல்ல விளைச்சலாகவும் அதன் ஒரு கட்டச் சாதனையாகவும் இச் சிறுகதைச் சிறப்பிதழ் அமைந்துள்ளது. முளைக்கின்ற புதிய எழுத்துக்களில் அக்கறையும் அதன் வருகையில் ஆதரவும் தருகின்ற ஒவ்வொருவருக்கும் இச் சிறுகதைச் சிறப்பிதழ் உற்சாகத்தைத் தரட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## லோகா

# அடுத்த தரிப்பு பாகிஸ்தானில்...

....நித்திரையும் விழிப்பும் யாருக்கு வேண்டியிருக்கிறது? இந்தியாவில் இரண்டு வருட அகதிவாழ்க்கையில் எத்தனை அனுபவங்களை....

இந்தப் பயணங்கள் நளினிக்கு என்றுதான் முடியுமோ?
இன்றைய காலை நளினிக்கு பஞ்சாப்பில் விடிகிறது. நேற்றைய பயணத்தின் அசதியில் படுத்திருக்க சுகமாகத்தானிருக்கிறது.
எதிரே லதா படுத்திருக்கிறாள்.
"எழும்புவமே?"
"இப்ப எழும்பினா ரொயிலற்றுக்கு கியூவிலதான் நிக்கோணும். ராத்திரி வந்த அவ்வளவு சனமும் இப்ப எழும்பி நிற்கும்".
"அம்மாவிற்கு கடிதம் ஒன்று எழுதோணும்"
எத்தனை நாளைக்கெண்டு பொய்யைப் பொய்யை எழுதிக் கொண்டிருக்கிறது. இரண்டு நாளில போயிரலாம் எண்டுதான் ஏஜென்ஸி நம்பிக்கையூட்டினார். இப்ப மூன்று மாதமாய் டெல்கி, பம்பாய், என்று இழுபட்டாச்சு. ஆனாலும் எங்கு நிண்டாலும் கட்டாயம் கடிதம் போடுபிள்ளை

கிளிநொச்சியைச் சேர்ந்த லோகாவின் முதற் சிறுகதை இது. தற்போது நெதர்லாந்தில் வசிப்பவர். கலை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு கொண்டவர்.

www.tamilarangam.net

என்று அம்மா சொல்லி விட்டது.....

அம்மாவை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது.

அந்த அறையின் ஒரு மூலையில் அவர்கள் கொண்டுவந்திருந்த சூட்கேசுகள் திறப்பாரற்றுக் கிடந்தன. கையோடு வீட்டிற்கு கடிதம் எழுதவென கொண்டு வந்த 'ஏரோக்கிராம்'களும் கசங்கிய இந்திய ரூபாய்களும் மேசை மீது கிடந்தன.

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கலண்டரில் பஞ்சாபிய உடையில் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த ஒரு அழகிய பெண்ணின் காட்சி. நேற்றிரவு இந்தக் ஹொட்டேலுக்கு வந்தபோது அந்தக் கவுண்டரில் இருந்தவன் பார்த்த பார்வை, இன்னும் ஏதோ சந்தேகமாகவும் பயமாகவும் இருந்தது.

டெல்கியில் நின்ற போது அவளின் முன்னும் பின்னும் திரிந்த ஏஜென்ஸிக்கு காசு கட்டிய பொடியன்களின் பாடல்களும், நக்கல் கதைகளும். சிலவேளை ஏஜென்ஸிக்காரனின் ஒருவித பார்வையும் பெரும் நரகம். ஒரு பெண்ணின் விருப்பு வெறுப்புக்களை அறியாது அவளைக் கட்டிலுக்கு அழைக்கும் ஆண்களின் வெட்கமற்ற தனமும் அவளை அருவருக்க வைத்திருக்கின்றன.

தொடர்ந்து வரும் அவமானங்களினால் பெட்டி படுக்கைகளை எறிந்துவிட்டு சென்னைக்கு அம்மாவிடம் ஒடி விட வேண்டும் போல் இருந்தது. பயணம் புறப்பட்டபின்னர் ஒவ்வொரு இரவுகளும் பயத்துடன்தான் கழிகின்றன. எங்களோடு வந்த பொடியன்களும் சரி, ஏஜென்ஸியும் சரி, இவர்களுடன் போய்த் தங்கும் இடங்களின் ஆண்களும் சரி, எல்லோருமே வெறும் இச்சைக்கு அலையும் ஆண்களாகவே தெரிகின்றனர். தாய்க்குலம், தாய்க்குலம் என்று வாய்கிழியக்கத்தும் இந்திய மண்ணிலும் இந்த ஆண்களின் வண்டவாளங்களை என்னென்பது.

நேரம் இரவு பதினொன்று ஆகிவிட்டது. லதாவும், நளினியும் இந்த மூன்று மாதகாலங்களில் இருவர் பற்றிய தங்கள் அனைத்து செய்திகளையும் பரிமாறிக் கொண்டனர்.

ஜேர்மனி, பிரான்சிலிருக்கும் அண்ணன்மார்கள், அந்த இடங்களில் கலியாணம் பேசியிருக்கும் பொடியன்கள் பற்றிய தெரிந்த தகவல்கள் இன்னும், இன்னும்.

ஆனால் பேசிக்கொள்ள இன்னும் ஏதோ இருந்து கொண்டுதான் இருக்கிறது.

நளினிக்கு லதாவும், லதாவிற்கு நளினியும் தான் தற்போதய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பென்றாகி விட்டது.

அடுத்த தரிப்பு பர்க்கிஸ் தானாம்...

வெளியே யாரோ கதவை அண்மிக்கும் சத்தம் கேட்கிறது. மிக மெதுவாக இவர்களின் அறைக் கதவு தட்டப்படுகிறது. இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள மட்டும் முடிகிறது.

கதவை யார் தட்டினாலும் திறக்க வேண்டாம் என்று எஜென்ஸி வேறு சொல்லியிருக்கிறார்.

இவர்களின் ரிக்கற் விடையம் சரிவந்தால் இரவு வந்து சந்திப்பதாக ஏஜென்ஸி சொல்லி விட்டிருந்தார். . அவராயிருக்குமோ?

"ஏஜென்ஸி" என்று லதாவைப் பார்த்து வாயசைத்தாள் நளினி.

"ஊகூம், ஊகூம் பொடியள்" என்று மெல்லியதாக மறுதலித்தாள் லதா.

ஏஜென்ஸி, அல்லது பொடியள் என்றால் கட்டாயமாகப் பேர்சொல்லிருப்பார்கள்....

நீண்டநேர இடைவெளிக்குப் பின் மீண்டும் கதவு தட்டப்படுகிறது.

"யார்"எனக் கேட்டாள் நளினி. எதுவித பதிலுமில்லை. ஆனால் தொடர்ந்து தட்டப்பட்டது, கதவு.

ஒருவித துணிவை வரவழைத்துக் கொண்டு கதவைத்திறந்தாள் நளினி.

அதே பஞ்சாப்காரன் அதிகாரத்துடன் அறைக்கதவைப் பூட்டினான்.

தொல்லை இரவுகள் மீண்டும் தொடர்கின்றன. இவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு இன்னும் எத்தனை, எத்தனை இரவுகளும் தப்பித்துக்கொள்ளலும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவகி இராமநாதன்

# போயினை போயினை....

ஞாயிற்றுக் கிழமை. அமைதியாக இருந்தது. நந்தினி கட்டிலில் புரண்டபடி அருகில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்தாள். நேரம் ஒன்பதை தாண்டி இருந்தது.

எழும்புவமா, வேண்டாமா என்ற கேள்வியுடன் போர்வையை விலக்கி எழுந்து கட்டிலில் இருந்தபடி யன்னலினூடாக பார்வையை ஓடவிட்டாள். இன்னமும் விடியவில்லை. விடிவதற்கு காலம் இருக்கிறது என்ற நினைவு வர எழுந்து சோம்பல் முறித்தபடி தண்ணியை வைத்துவிட்டு, அடுத்த நாள் பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்தை விரித்தபடி மேசையில் போய் அமர்ந்தாள் நந்தினி.

இரண்டு கேள்விகளுக்கு விடை எழுதி முடிய கேத்தல் கூவத் தொடங்கியது. கோப்பியை தயாரித்து மீண்டும் புத்தகத்தில் கவனத்தை செலுத்த முயன்ற போது மனசு எங்கோ தாவியது.

தற்போது நோர்வேயில் வசிக்கும் தேவகியின் ஆக்கங்கள் ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளில் புனைபெயர்களில் வெளியாகியுள்ளன.

www.tamilarangam.net

வெளியே மலையில், கடலில், லயித்த மனசு, இங்கு வந்து எத்தனை ஆண்டுகள்...

கிட்டத்தட்ட ஆறு வருடங்கள்...

ஊரில் அப்போதெல்லாம் வெளிநாடுதான் ஒரே ஒரு பாதுகாப்பு வலையம்.

கண்ணில் முழிக்காவிட்டாலும், கடல் கடந்த தேசத்தில் எங்காவது ஓர் மூலையில் உயிரோடிருந்தால் சரி என்பதில் அம்மா மிகவும் உறுதியாக இருந்ததின் விளைவு நந்தினி கடல் கடந்து துருவ கோடிக்கு வந்து சேர்ந்தாள்.

Airport ல் வெள்ளை வானில் ஏற்றி, ஒரே கேள்விகளை திரும்ப திரும்ப கேட்டு நந்தினியும் கிளிப்பிள்ளை மாதிரி திரும்ப சொல்லி, காம்ப் வாழ்க்கை முடிவுக்கு வந்து கையில் பயணப் பத்திரத்தை வழங்கி, வேலை என்ற பெயரில் சொந்த நாட்டவரே பயணப்படாத பகுதிக்கு அகதிகள் அனுப்பப்படுவது ஒன்றும் அதிசயமானதல்ல.நந்தினிக்கும் ரஷ்யாவின் எல்லையோடிருந்த கிராமம் ஒன்றில் வேலை கிடைத்தது.

வேலை நேரத்தோடு தொடங்கிவிடும். குளிர் கடுங்...குளிர். பகலைத் தொலைத்த பலமாதங்கள். மீனுக்கு முள்ளு வெட்டுவது வேலை. நீண்ட வரிசைகளில் ஆயுத பாணிகளாக, வெள்ளை சீருடையில் மழைக்கால காலணியுடன், வெண்ணிற தொப்பியுடன் பெண்கள். துரிதமாக இயங்கும் கைகள்.

முள் வெட்டுவது, Pack பண்ணுவது, லேபல் ஒட்டுவது.
நீண்ட நிலையில் 7 1/2 மணித்தியாலங்கள்.
குளிர், நாரி உழைவு, கால் நோ, வாட்டி எடுக்க அம்மாவின் நகையும், காணி உறுதியும் மனதில் எட்டி பார்க்க அதிவேகத்துடன் இயங்கும் கைகள்.
வட்டி கூட்டிக் கழித்து கடன் அடைத்து அப்பாடா என்று நிம்மதி.
சில வருடங்களில்.

வந்த நாளிலிருந்தே சீலன், சந்திரன், குமரன், சிவா எல்லோருமே ஒரே

www.tamilarangam.net

இடத்தில் ஒன்றாகவே வேலை செய்கிறார்கள்.

நந்தினி அவர்களுடன் அவசியமின்றிக் கதைப்பதில்லை.

வேலை, வீடியோ, பொழுதை விழுங்கிவிடும்.

ஐந்தாறு பேர் மட்டுமே குடியிருந்த அந்த கட்டிடத்தில் இப்போது பலர் குடி புகுந்திருந்தனர். இவர்களோடு வந்தவர்களில் ரவியும் ஒருவன்.

Factory ல் வேலை முறைகள் மாற்றப்பட்டு பக்கிங்கிற்கு நந்தினியும் மாற்றப்பட்டாள். அங்கு புதிதாக வேலைக்கு சேர்ந்திருந்த ரவியுடன் அறிமுகம் கிடைத்தது.

வேலையில் ஏற்பட்ட பழக்கம் திருமணத்தில் தரித்தது. அம்மாவுடன் கடிதங்கள், படங்கள், உறவைப் பேணின.

அதே கட்டிடத்தில் தளபாடங்களுடன் கூடிய புதிய அறைக்கு மாற்றம் கிடைத்தது.

ஆரம்பம் சந்தோஷமாகவே ஓடி மறைந்தது.

Winter ம் Summer ம் அவசர அவசரமாக வந்து போயின. நந்தினியும், ரவியும் சந்தோசமாக வேலை, வீடியோ என்று பொழுதை கழித்தனர். இரண்டாவது வருட கலியாண நாளை சந்தோஷமாக கொண்டாடி முடிய இருவரிடையேயும் ஏதோ ஒன்று விலகி நிற்கவைத்தது.

ரவியும் நாட்களை எண்ணி களைத்து, எங்களுக்கு பிறகு கலியாணம் செய்தவை எல்லாருக்கும் பிள்ளை இருக்கு, எங்களுக்கு மட்டும் ஒண்டையும் காணவில்லை என்று பொருமத் தொடங்கினான்.

குழந்தை கிடைக்கவில்லை என்பது இருவரிடமும் விரிசலை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தது.

ரவி காரணங்கள் ஏதுமின்றி எரிச்சலடையத் தொடங்கியிருந்தான். கோபம் காரணம் இன்றி எப்போதும் எட்டிப் பார்க்க தயாராக இருந்தது.

நந்தினியை டொக்டரிடம் காட்டியிருந்தும் உடனடியாக பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வு ரவியை அடியோடு மாற்றியிருந்து.

கோபம், கோபம், எதையெடுத்தாலும், எல்லாவற்றிலும் பிழை கண்டு பிடிப்பவனாகவும், எதிலும் திருப்தி அற்றவனாகவும் இருந்தான்.

வேலை, வீடியோ என்றிருந்த ரவி இப்போதெல்லாம் நேரங்கழித்தே வீடு வரத் தொடங்கியிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு நாள் ரவி ஓவர்ரைம் முடிந்து வீட்டுக்கு வந்த வேளையில் நந்தினி ஏதோ சீலனுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருப்பதை பார்த்து கதவை அடித்துச் சாத்தியபடி குளியலறைக்குள் போய்விட்டான்.
சீலன் போன பின்பும் ரவி நந்தினியுடன் கதைக்கவில்லை. படுக்கும் போது மட்டும், "ஏன் வீட்டில வேலை ஒண்டும் இல்லையே, குடும்ப பொம்பிளையா ஒழுங்கா இருக்கத் தெரியாதே, கண்ட கண்டவையோட என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு" என்று பேசிவிட்டு படுத்துவிட்டான்.
நந்தினிக்கு யோசனையாக இருந்தது. வந்த காலத்திருந்தே தெரிந்தவர்கள் கதைப்பதில் என்ன தவறு வந்துவிட்டது என்று தனக்குள் கேட்டுவிட்டு பேசாமல் படுத்துவிட்டாள்.

நாட்கள் நகர, நகர, கோபமும் அதை வெளிக்காட்டும் செயல்களும் அதிகரித்து வந்தன. நந்தினி இப்போ வாய் திறந்து கதைக்கவே பயந்திருந்தாள். கண்ணாடியில் ரவிக்கு முன்னால் அழகு பார்த்தால் போதும்,

"வடிவுதான் குறைச்சல் போய் வேலையை பார்" என்று எரிந்து விழுவான்.

நந்தினி எல்லாவற்றையும் தன்னுள்ளே அழுது தீர்த்துக் கொள்வாள். அம்மாவும் அடிக்கடி விசாரித்து எழுத தொடங்கியிருந்தாள்.

நந்தினிக்கும் குழந்தை என்றால் கொள்ளை ஆசைதான். கலியாணமான புதிதில் பெண்குழந்தை என்றால் நிவேதிதா என்று பேர் வைக்கலாம் "நிவே" என்று கூப்பிடலாம், ஆண்குழந்தை பிறந்தால் அபிராம் என்று பேர் வைக்கலாம் 'அபி' என்று கூப்பிடலாம், என்றெல்லாம் நிறையவே கற்பனைகள் இருந்தது. இப்ப மெல்ல மெல்ல நம்பிக்கை குறைந்து கொண்டிருந்தது. கடந்த கால இனிமையான பொழுது இனி வருமா?

ரவி இப்போது தாடி வைத்திருந்தான். குடிக்கத் தொடங்கியிருந்தான். நந்தினியுடன் கதைப்பதை நிறுத்தி, நாட்களாகி இருந்தன. சுற்றி பல தமிழ் குடும்பங்கள் இருந்தாலும் நந்தினியுடன் யாருமே மனம் விட்டுப் பழகுவதில்லை. நந்தினிக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஒரு திரை.

நந்தினி தனியே வெளிநாடு வந்தவள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் தாரமாக வந்து சேர்ந்தவர்கள்.

நாளுக்கு நாள் தனிமையும், வேதனையும் அதிகரித்தபடி, ரவியின் பாராமுகமும் நந்தினியை மிகவும் சித்திரவதை செய்தன. இப்போது ரவி எரிச்சல் வந்தால் சாமான்களை போட்டு உடைத்துத் தீர்த்துக் கொள்வான். எல்லாமே தலைகீழாக மாறிவிட்டிருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கத்தில் சந்தோசமான நாள். தொடர்ச்சியாக இரண்டு நாள் லீவு. எலாம் மணிக்கூட்டிற்கு அடிபணியத் தேவையில்லை. ஆற அமர எழும்பி, அமைதியாக இருக்கலாம், அன்று வேலை முடிய வீட்டுக்கு வந்த ரவி ஏதோ ஒரு கசற்றை மாற்றி வைத்ததை தாங்க முடியாது கசற்றை தூக்கி எறிந்து சண்டை பிடித்துக் கொண்டு வெளியே போய் விட்டான்.

நந்தினி யன்னலில் நின்று புதினம் பார்த்து விட்டு அழுதபடி படுத்து விட்டாள்.

வெளியே போன ரவி நேராகவே Barக்கு போனான். மனம் போன மாதிரி குடித்து விட்டு, சனம் வரத் தொடங்கவே வீட்டுக்குத் திரும்பினான். கீழ் வீட்டில் ஹோலில் வெள்ளி இரவை,உல்லாசமாக கழிப்பதற்கு சந்திரன், குமரன், சீலன் இன்னும் பலர் கூடியிருந்தார்கள். ரவி வருவதைக்கண்டு குமரன் அவனையும் கூப்பிட்டான். ரவி வந்தவுடன் மூலையில் இருந்த கதிரையில் குந்தினான். அவனுக்கு கொஞ்சம் வெறி ஏறி இருந்தது.

வேறுபட்ட உயர, உருவ பருமன்களில் போத்தல்கள் மேசையில் கொலுவிருந்தன. நடுவில் பெரிய ஆஸ்ரே. கிண்ணங்களில் கச்சானும், chipsம் கூடவே குந்தியிருந்தன.

சமையல் அறையிலிருந்து கறியின் மணம் ஹோலில் ஆட்சி நடத்தியது.

சீலன் ரை கட்டும் முயற்சியிலீடுபட்டிருந்தான். பக்கத்தில் ஒரு 'அரை' இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்திரன் சிரித்துக் கொண்டிருந்தான். கையில் கிளாஸ் காலியாகி இருந்தது.

சந்திரன் சம்பாசணையை ஆரம்பித்தான்.

"என்னடா ரவி நீ வெள்ளணையோட போட்டு வந்திட்டாய், என்ன அங்க சனம் இல்லையே? நேரம் செல்லத்தான் அவளவை வருவாளவை, அந்த மாதிரி இருக்கும், வெளிக்கிடு போவம்."

அங்க சனம் வரத் தொடங்க நான் வந்திட்டன்" என்றான் ரவி.

"எடேய் என்ன மர்திரி புது அயிட்டம் வந்திருக்கே.." இது சீலன்.

"அவனைப் போய் கேள் நீ. வெளிக்கிடடா போவம்".சந்திரன் அவசரப்படுத்தினான்.

"நான் ரெடி. இவன் சீலன் தான் ரை கட்டிறான்.இப்ப நாலு மணித்தியாலமா"

"உத' விட்டிட்டு வெளிக்கிடடா, சென்ரை அடி, நல்ல சப்பாத்தா போட்டுக்கொண்டு வா" இன்னும் அவசரமானான் சந்திரன்.

சீலனுக்கு ரையை ஒழுங்காக கட்டி முடிக்காமல் போக மனசில்லை. போன கிழமை தான் இவ்வளவு நாள் ஒழுங்காக டிஸ்கோக்குப் போனதின்ர பலனையே அனுபவிக்க தொடங்கி இருக்கிறான்.மொனிக்கா அவளோடு டான்ஸ் ஆட சம்மதித்திருந்தாள். இந்த கிழமையும் ஆடவந்தால் சரி. இனி அவள் என்னோட கொஞ்ச நாளைக்கு என்ற நினைவுகளோடு இழுபறி பட்டபடி கொஞ்சப்பேர் போக குமரனும் சிறியும் ஆற அமர அனுபவித்து இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன ரவி கொஞ்ச நாளா ஒரு மாதிரி இருக்கிறாய்? ஏதேன் பிரச்சனையே?"

ரவி ஒன்றும் சொல்லாமல் யன்னலினூடாக வெளியே பார்த்தான்.

"அவனுக்கென்ன பிள்ளையே, குட்டியே. அவன் சந்தோசமாத்தான்

www.tamilarangam.net

இருக்கிறான். உனக்கென்ன.. வெறியே"

சம்பாசனை தொடர்ந்து Factory ல் வேலை செய்யும் Anna பற்றி,அவள் Morter இனை விட்டு பிரிந்து தனியே வாழ்வது பற்றி, Summer job க்கு வந்த 18 வயது kina 40 வயது Olav வோடு காதல் புரிவதையும் கதைத்து பலதும் பத்தும் முடிந்து டிஸ்கோவிற்கு வெளிக்கிட்டனர். ரவி தனித்து விடப்பட்டான்.

சமையலறையின் பக்கமா சிங்கப்பூரில் செய்துவந்த நகையும், ஊர் புதினமும் அலசுப்பட்டு நந்தினி வீடும் சந்திக்கு வந்தது.

"சுகந்தி நீ கண்டனீயே, இண்டைக்கு நந்தினி வேலையால வரேக்க அழுது கொண்டெல்லே வந்தவா"

"நான் கேட்டனான், அவ ஒண்டும் சொல்லேல்ல"

"ஏதோ பிரச்சனை போல"

"ஓம் அவைக்கு பிள்ளையில்லை எண்டு மனக்கசப்புபோல"

"என்னெண்டு வரும்" என்று ஏளனத்துடன் நிறுத்தினாள் ராணி

"சிலபேருக்கு late ஆகவும் பிறக்கிறது."

"உவவுக்கு பிறக்காது நீ இருந்து பார்."

"இவ ஏதோ சாத்திரம் சொல்லுறா நீ கேள்."

"இஞ்ச சாந்தி. நாங்கள் நந்தினியின்ரை பக்கத்து ஊர் தெரியுமே உமக்கு. நான் இஞ்ச வர வெளிக்கிடேக்க அங்க உவவைப் பற்றி சனம் கதைச்சது பொடியன்களோட இருந்தவவாம். ஆரோடையோ தொடர்பாம். பிள்ளை வந்து அழிச்சுப் போட்டாவாம் எண்டு அங்க சொன்னவை. முதல் பிள்ளையை அழிச்சா பிறகு பிள்ளை பிறக்காதெண்டெல்லே சொல்லுறவை. அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெடியன்ர பேர் தெரியாது" என்று தனது விடுப்பை முடித்தாள்.

சோபாவில் தனித்து விடப்பட்டிருந்த ரவியின் காதுகளுக்கு இச் செய்தி எட்டியிருந்தது. ஆரோடு தொடர்பும், பிள்ளை அழித்ததும் திரும்ப திரும்ப காதில் வந்து ஒலிக்க, ரவி வேகமா வீட்டிற்கு வந்தான். உள்ளே சென்ற பானங்கள் உசார் வழங்க கதவை ஓங்கி அடித்து சாத்தினான்.


கட்டிலில் படுத்திருந்த நந்தினியின் தலைமயிரை பிடித்திழுத்து கட்டிலில் மோதினான். நித்திரைக் கலக்கத்திலும், ரவியின் தாக்குதலினாலும் குழம்பிய நந்தினிக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"எடியேய், பத்தினிக்கு நடிக்கிறியோடி, நீ ஆரோடையோ தொடர்பு வைச்சு பிள்ளையளிச்சனியாம் எண்டு கதைக்கினமடி" என்று குழறியபடி நந்தினியை அடிக்கத் தொடங்கினான். சுற்றி இருந்த பொருட்களை இழுத்து அவள் மேல் எறிந்தான். நந்தினியை பிடித்து தர தரவென்று இழுத்து வந்து வெளியில் விட்டு கதவை அடித்து சாத்தினான்.

நந்தினியின் தலையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நந்தினி ஓ வென்று ஒப்பாரி வைத்து அழுதபடி படியில் குந்தியதும் வீட்டிற்குள் ரவி சாமான்களை உடைக்கும் ஒலி கேட்டுக் கொண்டிருந்ததும் நினைவு இருந்தது. நந்தினி கண் விழித்தபோது தலை வலித்தது. உடம்பு முழுவதும் வலியாக இருந்தது. கண்களிலிருந்து கண்ணீர் வழிய தொடங்கியது. அருகே ஆதரவான பார்வையுடன். வெள்ளைச் சீருடையும், பொலீஸ் உடையும் சம்பவத்தை வலுக்கட்டாயமாகக் கோவைப்படுத்த வைத்தது. சம்பவத்தை விபரிக்க தொடங்க, ஓரிரு வசனங்கள் மட்டுமே சொல்லக்கூடியதாக இருக்க, நிலைமை புரிந்த தாதி மொழி பெயர்ப்பாளரை கூப்பிட அனுமதி கேட்டாள் ஆம் என தலையசைத்தாள் நந்தினி.

www.tamilarangam.net

# சாள்ஸ்






அது ஏப்பிரல் மாதம். முதல் வாரத்தில் கடைசிநாள்.

'வின்ரர்' முடிந்தது போல் 'ருல்பன்' கிழங்குகள் மண்ணைப் பிளந்து தண்டுகளை வெளியே தள்ளி இளவேனிற் பூக்களை விரிக்கத் தொடங்கி விட்டன.

கடந்த சில நாட்களாய் வெப்பநிலை உயர்வு அதிசயமாய் இருந்தது.
'இது வழமைக்கு மாறானது' என்றே எல்லோரும் பேசிக்கொண்டு
'சமரை' அனுபவிக்கத் தொடங்கி விட்டனர்.
நாங்கள்....
இன்று அவளது ஆறாவது பிறந்தநாள்.
மிக நேர்த்தியாய் நீல சைனிங் துணியில் அந்த இந்தியன் கடைக் கவுண்.
முன்பக்க கொலரில் வெள்ளை முத்துக்கள் அடுக்காய் மினுங்கின.

> 'ஒரு வீதிக்கு வந்த மனிதன்' என்ற சிறுகதை மூலம் அனேக வாசகர்களைத் தேடிக் கொண்ட சாள்ஸின் ஆக்கங்கள் தமிழோசை (லண்டன்), பாரிஸ் ஈழநாடு, 'அ.ஆ.இ' ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. கவியரங்கு,நாடகம் ஆகியவற்றில் தேர்ச்சிபெற்றவர். 'அ.ஆ.இ' ஆசிரியர் குழுவில் ஒருவர். தற்போது நெதர்லாந்தில் மின்னியற் தொழிற்கல்வி பயில்கிறார். பிறப்பிடம் யாழ். நெடுந்தீவு.

www.tamilarangam.net

குறைத்து வெட்டிய தலைமயிரை நாலாய் வகிடு பிரித்து உச்சியில் கட்டிய முடி பிரிந்து கிடக்கும் தென்னம் பாளையாய் தெரிந்தது.
தாயிடம் அடம்பிடித்து பொட்டும், பூச்சும் அப்பியிருந்தாள்.

தன் வகுப்பில் சிறுவர்கள் கீறிக் கொடுத்த வர்ணப்படங்ளை ஒவ்வொன்றாய் தூக்கி வைத்து தன் கரிய விழிகளால் நளினம் காட்டி எடுப்பாக கதை சொல்லிக் கொண்டிருந்தாள்.

அங்கும் இங்கும் 'பிஸியாய்' நடப்பதும், வெளியே தோட்டத்தில் 'ருல்ப்பனுக்'கிடையாய் ஓடுவதும் பின்னர் பொம்மிக் கொண்டிருக்கும் சட்டையை ஒதுக்கிக் குந்துவதும் அடிக்கடி வாசலைப்பார்ப்பதுமாக அவள்.

தன் முதலாம் வகுப்பில் தனக்குப்பிடித்த ஆறு தோழிகளும், தன்னைக் கேலி செய்யாத ஒரு தோழனும் அவளது சொந்த விருப்பத்தின் பேரில் அழைக்கப்பட்ட விருந்தாளிகள்.
அவளது இன்றைய நினைவுகள் அவர்களுடன் விளையாடுவதும், அவர்களது பரிசுகளும்.
நானும் மனைவியும் அடிக்கடி அவளைப் பார்த்து எங்களுக்குள் சிரித்துக் கொண்டோம்.

அவர்களுக்கான பானங்கள், சிற்றுண்டிகள், மாலைச் சாப்பாட்டுக்கான 'பிறிகண்டேல்', பொற்றாற்', 'கொம்கொமர்' எல்லாமே எடுத்து வைத்து விட்டோம்.

நேரம் இரண்டுமணி. தாய்மார்கள் பிள்ளைகளுடன் வரத்தொடங்கி விட்டனர்.
"அப்பா- அம்மா கதவைத் திறவுங்கோ"
"கத்தத் தொடங்கீற்றாள்" தாய்
"அவசரப்படாதே அவர்கள் பெல்லை அமத்தட்டும்" என்றேன் அதட்டலுடன்.
தலையைச் சிறிதாய் கவிண்டு மேற்கண்ணால் முறாய்த்தாள்
கேலி செய்தால், கோபமாய் அதட்டினால் - தன் எதிர்ப்புணர்வை இப்படிக்காட்டுவாள்.
"அவவிட மன்னையும் முழியும்" நான்

www.tamilarangam.net

பிள்ளைகளைக் கூட்டி வந்த தாய்மார்கள் வாசலில். அவளுக்கு வாழ்த்துக்கள் சொல்லிக் கைகுலுக்கி அவள் பேரில் எமக்கும் கை தந்து மிக இயல்பாய் சந்தோசமாய் அவர்கள்.

"மாலை ஆறு மணிக்கு நாமே கூட்டிவந்து வீட்டில் ஒப்படைக்கிறோம்" வாக்களித்து அவர்களை அனுப்பி விட்டோம்.

இப்போது அவள் மிகக் குதூகலமாகிவிட்டாள். பெரிய மனிஷியாய் வள வளவென்று டச்சில் அவர்களுடன்.
பரிசுப் பொருட்களை பக்குவமாய் பிரித்து மேசையில் பரப்பினாள்.
விதம் விதமாய் ஒரு சிறுமியின் கனவுகளுக்கும், விருப்புக்களுக்கும் உகந்ததாய்... 'கலர் பென்சில்கள்', மிருகங்கள் பறவைகளின் படங்களுடன் புத்தகங்கள், வண்ணம் தீட்ட கோடிட்ட புத்தகங்கள், பார்பி பொம்மைகள்.....
எல்லோருக்கும் நன்றி சொன்னாள்.

நாங்கள் அவர்களை இருக்க விட்டு பானங்களையும், சிற்றுண்டிகளையும் பரிமாறினோம். சாப்பிடாமலே விளையாடத் துடித்தனர்.

ஒளித்துப் பிடித்தல், கெந்துதல், கயிறடித்தல். பலூன் நடனம், அன்னமரி கூக்கூ.....
அந்த எட்டுப்பேர்களுடன் இரண்டு வயது மூத்தவனான அவளது அண்ணனும்.

பள்ளிப்பாடல்களை சத்தமாய் பாடினர். இன்று அவர்களுக்கு மிக இன்பமாய் கழிந்து கொண்டிருந்தது பொழுது.
நேராய் எந்தக் கூச்சமுமற்று தேவையானதைக் கேட்கவும் சேர்ந்து விளையாடவும் எந்த ஒளிவு மறைவில்லாத தனி உலகம் அவர்களுடையது.
எந்தப் பேதங்களுமற்ற வாழ்க்கை. கறுப்பு வெள்ளை, இனப்பிரிப்பு, ஏற்றத்தாழ்வுகள் எதுவுமே அறியாத பருவம்.

வளர வளர எத்தனை ஆயிரம் வேற்றுமைகளில் ஊறிப்போய்... ஒன்றுக்கு ஒன்று குரோதமாய்....

இந்த உலகம் சிறுவர்களுக்காக மட்டும் சிந்திப்பதாய் இருந்திட வேண்டும்.

www.tamilarangam.net

வயது வந்த 'முட்டாள்கள்' உலகத்தின் மீது சுமத்தியிருப்பது எத்தனை ஆயிரம் குரோதங்களும், கொடூரங்களும்... 'எதிர்காலம் சிறுவர்களுடையது' என்று ஏமாற்றிக் கொண்டு....

"நீங்கள் விளையாடி முடித்தீர்கள் என்றால் நாம் வெளியே சிறிது தூரம் நடக்கலாம்" என்றேன்
"எங்கே"ஆவலாய்க் கேட்டனர்
"ஆற்றங்கரையிலுள்ள சிறுவர் பண்ணைக்கு"
இரட்டை ஆனந்தம் 'யுப்பி,யுப்பி ' சொல்லி கைகளைத் தூக்கிக்கொண்டு துள்ளினார்கள்.
நாம் எல்லோரும் வெளியே நடக்கத் தொடங்கினோம்.

நெதர்லாந்தின் மத்தியிலமைந்த ஒரு சிறு கிராமம் இது. ஐரோப்பாவை அரவணைத்துவரும் றயின் நதியில் கிளை பிரிந்து 'குறோமறயின்' என்ற பெயரில் ஒரு குட்டி ஆறு - இக்குக்கிராமத்தைச் சுற்றி இதன் மூன்றில் இரண்டு பகுதிகளை முத்தமிட்டு தண்ணீர்ப்பாம்பாய் நீளுகின்றது. கரையெங்கும் நீண்டு வளர்ந்த 'அய்க்கென்' மரங்களும் அந்த நிழல் மரக் குகைகளை ஊடறுத்துச் செல்லும் நடைபாதையும், இருமருங்கும் பூத்துக் குலுங்கும் காட்டுச் செடிகளும் , உள்ளே புகுந்து 'பிறாம்போஷின்' பழங்களைப் புடுங்கித்தின்ன அவர்கள் நுழைவதும், எனக்கு என் இளமைக்கால வன்னிக்காடுகளின் நினைவுகளை மீட்டது.

எம் குடியிருப்புக்கு வெளியே விரியும் அப்பிள், பியர்ஸ், திராட்சை, கேர்சன், செறி மரத்தோட்டங்களும் - அவை நிரையாய்ப் பூத்து இலைதெரியாமல் காய்த்து நிறைந்து கிடப்பதும் பார்க்க கொள்ளை ஆசை தரும்.

ஆபிரிக்கநாடுகளிலிருந்தும், ஸ்பெனிலிருந்தும் 'சமர்' வந்துவிட்டால் இங்கு கூட்டமாய்ப் பறந்து வந்து இந்தக் கூடல்மரங்களைத் தமதாக்கிக் கொண்டு, அந்தப் பழத்தோட்டங்களில் 'கெரில்லா'போர் நடத்துகின்ற அந்த சிறு 'ஸ்பிறால்குருவிகள்' எவ்வளவு சுறுசுறுப்பானவை.

'தேசங்கள் முழுவதும் எமக்குமுரியன' என்று ஆக்ரோஷமாய் பாடுகின்றன அவை.

www.tamilarangam.net

எரிச்சலும் - வாழ்வில் வெறுமையும் - பயமும் பதட்டமும் ஒரு அரைகுறை மனநோயாளியாய் வாழத்தலைப்பட்ட ஒரு அகதியின் நம்பிக்கைக்குரிய பாடல்களை இந்தச்சிறு குருவிகள் 'தேசங்கள் முழுவதையும் உனக்காக்கிக் கொள்' என்று இசைப்பதாய் எனக்கொரு கனவு.

பூமியால் மறைக்கப்பட்ட சூரியன் சிவந்து தன் கோபக் கதிர்களைப் பரப்பியிருக்கும் அந்த மாலைப் பொழுதில் அந்தப் ஸ்பிறால் குருவிகளின் பாடல்களில் லயித்துக் கிடக்க பேரார்வம்....

அந்த நடைபாதையில் மேலும் ஒரு மூன்று நிமிடங்கள் நடக்க அந்தச் சிறுவர் பண்ணை. மயிலிலிருந்து லவ்பேட்ஸ் வரையிலான பறவைகள். பரந்த கம்பிக் கூடுகளிலும், திறந்த பகுதிகளிலும். ஆடுகளிலிருந்து எலிவரையிலான சிறு சிறு மிருகங்கள்.

சிறுவர்கள் தடவவும், உணவு வழங்கவும் தக்கதாய் தலையைத்தூக்கி, கழுத்தை நீட்டி பயமில்லாமல் நிற்கின்றன.

அவர்கள் மிகச் சந்தோசமாய் தடவி, கதைபேசி, குட்டிகளையும், குஞ்சுகளையும் தூக்கி உற்சாகமாயிருந்தனர்.

உயிர்களை நேசிக்கின்ற பண்பை இந்தச் சிறுவர்களிடம்தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டும் கள்ளம் கபடமற்ற பொய்மையில்லாத அன்பு....
நாம் பெரியவர்கள் என்ற திமிரில் எல்லாவற்றையும் விற்றுக் கொண்டிருக்கிறோமா?

அவர்களுக்கு நாம் எம் குரோதம், பாகுபாடு, இனவெறி,கொலைவெறி எல்லாவற்றையும் கற்பித்துக் கொண்டு வருகிறோமே -ஏன்.

அதட்டுதல், அதிகாரம் செலுத்துதல், அடித்தல் எல்லாமே எம்மில் ஊறிப்போன வன்முறையின் அல்லது ஆற்றாமையின் பிரதிபலிப்புக்கள்.

என் நினைவுகளிலிருந்து விடுபட்டு. பொய்மையற்ற அந்தச் சிறுவர்களின்

www.tamilarangam.net

முகங்களைப் பார்த்து என் மகளின் தகப்பனாய் அடிக்கடி சிரித்துக் கொண்டேன்.

அங்கிருந்து திரும்பி பின்னர் ஆட்டமும் பாட்டும் ஒருவர் பின் ஒருவராய்-றெயின் விளையாட்டும் நடத்தி வீடு வந்த போதும் அவர்களிடம் துள்ளுகின்ற குதூகலம் குறையவே இல்லை.

மாலை நெருங்க நண்பர்கள் உறவினர்கள் என்று சிலர் வரத்தொடங்கிவிட்டனர். எம்மீதும் எம் குழந்தைகள் மீதும் உரிமையோடு பங்கெடுத்துக்கொள்ளும் அவர்கள் அழைப்புகள் இல்லாத விருந்தாளிகள். அவளுக்கு ஆளுக்கு ஒரு பரிசுப் பொருளுடன். அவர்களின் வருகையை அவதானித்த சிறுமியொருத்தி,
"உனது ஓமாவும், ஒப்பாவும் வந்திருக்கிறார்களா?" என்று விழித்தாள்.
நெதர்லாந்தில் சிறுவர்களின் பிறந்த நாட்களில் அவர்களின் பேரன் பேத்திகளின் வருகையும், அவர்களின் பரிசுப் பொருட்களும் மிக முக்கியமானது என்பதுபோல் இருந்தது அக்கேள்விகள்.

"இல்லை அவர்கள் சிறிலங்காவில்".
"சிறிலங்கா தூரமா காரில் வரமுடியாதா?".
"இல்லை பிளேனில்தான் வரவேண்டும்"
தொடர்ந்தும் அவர்களது உரையாடலைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தோம் நாம் எல்லோரும்.
"என்ர தாத்தா செத்துப் போனார். அம்மா நெடுக அழுதுகொண்டிருப்பா. அவர்தான் அது " சுவரில் தொங்கும் அந்தப் படத்தை கைகளைத் தூக்கி ஒற்றை விரலால் சுட்டினாள்.

"இலங்கையில யுத்தம். அதிலதான் அவர் செத்தவராம். என்ர பெரியப்பாவும் காணமல் போயிட்டாராம்"
"ஏன் யுத்தம் நடக்குது" என்றாள் அந்தச் சிறுமிகளில் ஒருத்தி
"அது எனக்குத் தெரியாது. என் பெற்றோருக்குத்தான் தெரியும்'. என்றாள் இவள்.
இந்தக்குழந்தைகள் இக்கேள்விகளை என்னிடம் கேட்டால் என்ன பதில் சொல்வது நான். உங்களுக்கு இதுவெல்லாம் தேவையில்லை என்று

www.tamilarangam.net

மழுப்புவதா? அதுவும் சரியில்லை. கதையை வேறு வழிக்குத் திருப்புவதா?
ஏன் யுத்தம் நடக்கிறது?
எம்மிடமுள்ள ஆயிரங் காரணங்களைச் சொல்லி, அவர்களுக்கு ஒரு பேச்சையே நிகழ்த்தி விடலாமா? - அவர்கள் சிறுவர்களல்லவா?
இவர்களையொத்த யுத்தப்பிரதேச சிறுவர்களின் வாழ்வை இவர்களுக்கு என்னால் புரிய வைக்க முடியுமா?

அந்தக்கதை அத்துடன் துண்டுபட்டு வேறு விளையாட்டில் அவர்களின் கவனம் திரும்பியிருந்தது.
நாமும் வந்திருந்தவர்களுடன் பலவேறு விவகாரங்களிலும், கதைகளிலும் மூழ்கிப்போய்....
பின்னர் அந்தச்சிறு சிட்டுக்குருவிகளுக்கு உணவளித்து வீடுகளில் சேர்ப்பித்தோம்.

www.tamilarangam.net

பொ.கருணாகரமூர்த்தி

# ஒரு தரையில் நட்சத்திரம்



என் காதல் மனைவி நேற்றே 'bake' பண்ணி வைத்த கேக்கை அழகாக 'ஐசிங்' செய்வதற்காக செதுக்கியபடி குசினிக்குள் இருந்து கொண்டு மூன்றாவது தடவையூாக வாக்குறுதி தந்தாள்.

"இன்னும் ஐஞ்சு நிமிஷத்திலே கோப்பி வரும்!"

அடுத்த தடவையும் கண்ணம்மா வாக்குத் தவறுவாளாயின் பியரிடமே தஞ்சம் புகுவது என்று தீர்மானித்தபடி அன்றைய மாலைப் பத்திரிகையைப் புரட்டினேன்.

முழுப்பக்கக் கட்டுரை ஒன்றின் நடுவே பிரசுரிக்கப்பட்டிருந்த நடுத்தர வயது மனிதரின் புகைப்படத்தைப்பார்க்கப் பார்க்க ஏதோ பல வருடகாலம் பக்கத்து வீட்டில் வாழ்ந்து பழகிய ஒருவரைப் பார்ப்பது போலிருந்தது.

பேர்லினில் வாழும் கருணாகரமூர்த்தி கர்நாடக சங்கீதத் துறையில் நல்ல ஈடுபாடு கொண்டவர். கணையாழி, பனிமலர் போன்ற சஞ்சிகைகளில் சிறுகதைகள் எழுதியுள்ளார். ஹெம்மிங் வே,ஆர்.கே.நாராயண், முல்க்ராஜ் ஆனந்த் போன்றோர் இவரது ஆதர்ச எழுத்தாளர்கள். இன்றைய புகலிலக்கியப் பரப்பிற்கு இவர் வருகை வலுச்சேர்க்கிறது.

www.tamilarangam.net

சராசரி ஐரோப்பியர்களைப் போலல்லாது சற்றே கறுத்த கண்களும் மூக்குக்கு மேலே பொருந்துகின்ற அடர்த்தியான புருவங்களும்..... என் ஞாபகசக்திதான் ஏதோ சதி செய்கிறது. இம்மனிதனை நிச்சயமாய் நான் எங்கேயோ மிக அண்மையில் நின்று தரிசித்திருக்கிறேன். எங்கேயென்று அறியாதது தவிப்பாயிருந்தது.

கட்டுரையை மேலோட்டமாகப் படித்தேன். 'J.J.Karl Murthy 1916 ம் ஆண்டு Dresden நகரை அண்மித்த Chemnitz ல் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே பலதரப்பட்ட இசைக்கருவிகளையும் வாசிப்பதில் வல்லவராய் இருந்ததோடு, புது இசை வடிவங்களை ஆக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். தன் 24 வது வயதிலேயே Leipzig இசைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பதவியேற்றார். அங்கு அவர் இசை பற்றிச் செய்த ஆய்வுகளும், அமைத்த இசைக்கோர்வுகளும் (compositions) ஏராளம்! இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னர் உலக நாடுகளின் இசையரங்குகள் அனைத்தும் இவரது பிரசன்னத்திற்காக காத்துக்கிடந்தன.

அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும் ஜப்பானிலும் சில மாதங்கள் தங்கியிருந்து music concert களும் பல opera க்களும் நடத்தியுள்ளார்.'

கேக் செய்ய ஓடர்தந்த பிறந்த தினக் கொண்டாட்டக்காரர் வரப்போகிறார்களென்று அவசரமவசரமாக 'ஐஸிங்' செய்து கொண்டிருந்த மனைவியிடமும் எனது 'வியப்பை' விபரித்தேன்.

"நாற்பது வருடத்துக்கு முந்தி எடுத்த படத்தைப் போட்டிருப்பாங்கள் உதை வைச்சுக்கொண்டு மூளையை உடையாமல் உருப்படியாய் ஏதாவது செய்யப்பாருங்கோ, மனிசன் டிவியில ஒரு மூலையில நின்று Jazz ஊதியிருக்கும்."

வேறேதாவது டிப்ஸ் தர முடியாதா?"

"ஒரு நாள் U-Bahnல்(சுரங்க ரயில்) ஒல்லியாய் ஒடிசலாய் உயரமாய் நீளக்கழுத்தோட, ஓவல் முகமும் சாம்பல் கண்ணுமாயிருந்த ஜெர்மன் காரியைப் பார்த்து உருண்டைத்தலையும், பாரைக்கட்டையாய் குண்டாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொண்டையே இல்லாமலிருக்கும் உங்கட அம்மாவைப் போல இருக்கிறாளெண்டனீங்களல்லே....."

"Please be serious"

"இரண்டு வருஷத்துக்கு முன்ன என்னைத் தனிய விட்டிட்டு பாரீஸ் போனனீங்களல்ல....அப்ப உங்களுக்கு முன் சீட்டிலிருந்து பயணம் செய்த மனுஷின்...."

"பெரிய உலக மகா இசை மேதையென்று போட்டிருக்கு...என்னோட செக்கன்ட் கிளாஸ் டிக்கற்றில் பயணம் செய்திருக்க சான்ஸ் கிடையாது....ஊகூம்"

"Music Mar என்றால் போன வின்டரில யூனிவேசிற்றி ஹோல்ல பர்வீன் சுல்தானாவின், கஜல் கச்சேரியில நீங்களும் சேர்ந்து அவவோட பாடினனீங்களல்ல...அந்தக் கச்சேரிக்கு வந்து முன் சீட்டில உட்கார்ந்திருப்பார்."

என்னைத் திரும்பிப் பாராமலே கிண்டல் பண்ணிவிட்டுத் தொடர்ந்து "ஐஸிங்" செய்யலானாள்.

"எங்காலும் பஸ்ஸிலோ,உ-பாணிலோ, சுப்பர் மார்க்கெட்டிலோ கண்டிருக்கக்கூடியவர்களையெல்லாம் 'ஞாபகம்' வைத்திருக்க முடியவில்லையேயென்று கவலைப்படாதேயுங்கோ..... இதே பிரச்சனை ஐசாக் நியூட்டனுக்கும் இருந்தது..."

உ-பாண் என்றதும் என் மூளையினுள் ஒரு மின்னலடித்தது! அம்மின்னல் கீற்றின் பொன்னொளி என் ஞாபக ஏடுகளின் சரியான பக்கத்தில் விழுந்தது!

பெர்லின் சுரங்க ரயில்கள் (உ-bபாண்) விரையும் தடங்களும், எஸ் -bபாண்(S-Bahn) எனப்படும் தரைக்கு மேலான நகர விரைவு ரயில்களினதும் தடங்களும் பின்னிய சிலந்தி வலையில் ஒரு தடத்துடன் இன்னொன்று தற்செயலாகச் சந்தித்தது போல அமைந்த Gகெசுண்ட் புறுண்ணன் சந்தி ரயில் நிலைய முன்பதாக அமைந்திருக்கிறது நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலை செய்யும் வைட்வெடிங்(white wedding)எனும் மியூசிக்கபே.

இங்கு ஏனைய டிஸ்கோதேக்குகள் போன்று டான்ஸ் ஆட விசேட மேடைகள் எதுவும் கிடையாது. ஆனால் அங்கு வரும் இளசுகள் 'கிக்' ஏறியதும் வைக்கப்படும் இசையின் துள்ளலுக்கேற்ப ஜோடி ஜோடியாக இணைந்தும் பிணைந்தும் ஆடத் தொடங்கிவிடுவர். நேற்று கலிபோனியாவில் ஒரு புது சி.டியோ, எல்.பியோ வெளியானால் இன்று அவ்விசை வைட் வெடிங்கில் 500 வாட்ஸ் சவுண்ட் சிஸ்டத்தில் அதிரும்.

புது இசை வெளியீடுகளைக் கேட்க ஈர்க்கப்படும் கூட்டத்தால் க(f)ப எப்போதும் 'ஜே ஜே' என்றிருக்கும். கோடை,குளிர்காலம் என்ற பாகுபாடின்றி பியர், ஷாம்பெயின், விஸ்கி, சம்பூக்கா ஆறாக ஓட இரவு இரண்டுமணியானாலும் 'விருந்தினர்களை' வெளியனுப்பி கதவைச் சாத்துவதென்பது கஷ்டமானகாரியம்.

எனக்கு மாலை முழுவதும் கோப்பி கப்களும்,பீங்கான்களும் கழுவும் விளையாட்டு, பின் இடையிடையே சலாட் போடுதல், பௌகெட், ஹவாய் ரோஸ் போன்று சிறு சாப்பாடுகள் தயாரித்தல், கெல்லரில் இருந்து பியர் கொண்டுவந்து நிரப்புதல், பின் கடை பூட்டியபின் நிலம் 'மொப்' பண்ணுதலும் என் பணியுள் அடங்கும்.

மிக அதிகமாக வியாபாரம் நடைபெறும் வேளைகளில் 'பாரு'க்கு என்னையும் பியர் வார்க்க கூப்பிடுவர்.

அநேகமான 'விருந்தினர்கள்' ஏதோ பாலைவனத்திலிருந்து நேராக வரும் ஒட்டகம் போன்று வந்தவுடன் ஒன்றன் பின் ஒன்றாக நாலைந்து பெரிய 'பெக்' பியர் குடிப்பர். பின் ஹாய் ரோஸ்டையோ, இறால் வறுவலையோ உள்ளே தள்ளிவிட்டு விஸ்க்கி, அஸ்பாக் போன்ற ஹொட்டிரிங்ஸ் சாப்பிடத் தொடங்குவர். இவர்கள் பேசிக்கொண்டே விஸ்க்கியில் தோய ஒன்பது மணிக்கு மேல் நிக்கல் முலாம் பூசிய இரும்பு ஆணிகள், றிவேட்கள், சங்கிலிகள் பொருத்தப்பட்ட தோல் ஆடைகள் முரடான சப்பாத்துக்கள் கௌபோய் பாணியில் அணிந்த Hashish, heroin, cocain வியாபாரிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டம் Harley Davideson, Red Indian போன்ற ராட்சத அமெரிக்கன் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவர். பணமும் லாகிரிவஸ்த்துக்களும் வேகமாகக் கைமாறும். கடைமுதலாளியே இவர்களிடம் சரக்கை மொத்தமாக வாங்கிப் பின் சில்லறையாக வியாபாரம் பண்ணும் வேளைகளும் உண்டு.

பாரில் நான் வேகமாக பியர் வார்த்துக் கொண்டிருந்த ஒரு மாலை என் எதிரில் உட்கார்ந்திருந்தவன் ஒரு தாளில் 'வெள்ளைப்பவுடரை' க் கொட்டி வைத்திருந்து கொண்டு அடிக்கொருதரம் மூக்குப்பொடி போல் அதை உறிஞ்சிக் கொண்டிருந்தான். எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக புவியீர்ப்பு எதுவுமற்ற ஒரு உலகத்தினுள் பிரவேசிப்பது போலிருந்தது. அதுவே நல்லது போலுமிருந்தது சுகமான ஒரு கனவைப்போல. தொடர்ந்து பியர் வார்க்க முடியவில்லை. ஒபீஸ் அறையுள் போய் படுத்துவிட்டேன். காற்றில் வந்த கொகொயின் மகத்துவம் அறிந்தது அதுதான் முதன்முறை.

போஸ்ட் ஒபீஸ் மெழுகு மாதிரியான பிறவுண் நிற ஹஷிஷ் துண்டுகளை சிகரெட் லைட்டரினால் சூடுபண்ணிவிட்டு அவை ஆறிப் போனதும் பொடி பண்ணி சிகரெட் புகையிலையுடன் கலந்து புகைப்பர். ஒவ்வொரு வஸ்துக்கும் ஒவ்வொரு வகையான லாகிரி போதையுண்டு. ஹஷிஷ் புகைக்கப் புகைக்க செவிகள் அடைபடும். இசையைச் சத்தமாக வைக்கச் சொல்லிச் சதா கூச்சலிடுவர். பின் இனிப்பு அதிகமான பழரசங்களையோ, கொக்ரெயில்வகைகளுக்கோதான் அதிகம் ஒடர் பண்ணுவர். சிலர் பெர்லினர் வைஸ் எனப்படும் பியரினுள் இனிப்புச் செறிவு அதிகமான கரமல்களையோ கோர்டியங்களையோ கலந்தும் குடிப்பர்.

ஹஷிஷ் புகைப்பவர்கள் அதிகமாக அதிகமாக பாவெட்டையிலையைப் பச்சையாகவே எரியூட்டுவது போல எல்லா இடமும் மணம்கமழும். கல்யாண ஹோமம் வளர்த்தது போல கபேயின் 'ட' வடிவ ஹோல் முழுவதும் ஒரே புகை மண்டலம். பொலிஸ் பாயும் என கதவுகளையும் திறக்கவே மாட்டார்கள். விரும்பியோ விரும்பாமலோ அப்புகை மண்டலத்தையே திரும்பத் திரும்ப சுவாசிக்க வேண்டிய தொழில் நிர்ப்பந்தம்.

ஹஷீஷ் புகை மண்டலச் செறிவு அதீதமாகி சதா சிகரெட்புகையுடன் இருந்து மூச்சு முட்டிக் கொண்டிருந்த இன்னொரு சமயம், நான் பியர்

www.tamilarangam.net

வார்த்துக் கொண்டிருக்க பாரின் மேசைக்கும், வலப்பக்கமாக இருக்கும் ஐஸ் கட்டி உண்டுபண்ணும் பெட்டிக்கும் இடையில் இருக்கும் சிறு தட்டில் சுண்டெலி யொன்று நிதானமாக வந்து அணில்ப் பிள்ளைபோல் குத்துக்காலிட்டு உட்கார்ந்து என்னைப் பார்க்கிறது. 'ஏதோ வருத்தமாக்கும் ஓடமுடியவில்லை' என்ற நினைப்பில் நான் எனது வேலையில் மூழ்கிவிட்டேன். அரை மணி நேரம் கழித்துத் தற்செயலாகப் பார்க்கிறேன் என்னிடம் பியருக்கு ஓடர் பண்ணிவிட்டுக் காத்திருக்கும் பாவனையில் இன்னமும் உட்கார்ந்திருக்கிறது. சற்று நேரம் செல்லச் செல்ல கடை முழுவதும் ஏழெட்டு சுண்டெலிகள் எல்லாம் பாதிக்கண்ணை மாத்திரம் திறந்து வைத்துக்கொண்டு கால்களைப் பரவிப் பரவி வைத்து யாருக்கும் கிஞ்சித்தும் பயமின்றி உலாவந்தன. ஹஷீஷ் புகை சுண்டெலிகளுக்கு மட்டும் போதை தரப்படாதா என்ன? 'இரண்டு சிகரெட்டுக்களில் உள்ள நிகொட்டினை தனியே பிரித்தெடுத்து ஒரு சுண்டெலிக்கு ஒரு தடவையில் ஒரு ஊசி மூலம் ஏற்றினால் அது இறந்துவிடும்' என்ற கூற்றை முதன் முதலில் நம்பினேன்.

கடை பூட்டும் வேளை அறிவிக்கப்பட்டதும் 'பிரக்ஞை' யுடன் வெளியேறியோருக்கு மனம் நன்றி சொல்லும். ஊசி ஏற்றிக் கொள்ளப்போய் ரொய்லெட்டினுள் தூங்கி விடுபவர்களையும், ஸ்ரூல்களில் அசௌகரியமாக உட்கார்ந்து வீட்டுக்குப் போக மனமில்லாது 'மயிந்து'பவர்களையும்,கதிரையில் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருப்பவர்களையும், 'இன்னும் கொஞ்சம் பியர் தா' என்று bar‌ச் சத்தம்பண்ணியபின்னரும் யாசிப்பவர்களையும் செபி (முதலாளி)யும், இதர சிப்பந்திகளும் நிற்கும் வேளையில் வெளியேற்றிவிடவேண்டும். அல்லது அவங்களுடன் 'லோல்' படவேண்டிவரும்.

ஹலோ... தயவு செய்து எழுந்திருப்பீரா?' கண்கள் குறாவ மொய்த்துக்கொண்டிருந்தவன் "குட்டன் ஆபெண்ட்"

மாலை வணக்கம் சொல்லுவான் மறுபடியும் அப்போதான் சந்திப்பவன் போல

"குட்டன் ஆபெண்ட்.. தயவு செய்து எழுந்திரும்"
"எதுக்கு?"

"கடை பூட்ட வேணும் நேரமாச்சு"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அதுக்குள்ளயா?.... எத்தனை மணி இப்போ?"

"இரண்டுமணி"

"இரவா...பகலா?"

"அதிகாலை"

"சைவுடி (வசவு வார்த்தை)"

சிலர் ஒரு கதவால் வெளியேறி மறு கதவால் உள்ளே நுழைந்தும் விடுவர். யாராவது இரண்டு 'தம்' ஹாஷீஷ் கொடுப்பார்களாயின் அவர்களுடனேயே போய் இரவு முழுவதும் படுக்கக் காத்திருக்கும் விடலைப் பெண்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டு, கதவுகளையும், ஜன்னல்களையும் அகலத்திறந்து வைத்துப் புதிய காற்றை உள்ளே வர விடுவேன்.

மழை விட்டது போல் இரைச்சல் ஆரவாரம் அத்தனையும் ஓயந்தபின் வரும் அமைதி அனுபவித்தற்குரியது. சூடாக புதுக் கோப்பியோ தேநீரோ தயாரித்துக் குடித்த பின்னால் நிதானமாக எனது பணியின் மறுபடலத்தை ஆரம்பிப்பேன்.

பொண் ஜொலியும், இடொல் பில்லியும் அதிர்ந்து பிளிறிய சவுண்ட் சிஸ்டத்தில் இப்பொழுது மகராஜபுரம் சந்தானமும், ரி.என்.பாலசுப்பிரமணியமும், முசுரி சுப்பிரமணிய ஐயரும், பம்பாய் சகோதரிகளும், பர்வீன் சுல்தானாவும் வரிசையில் வந்து தாழ் தொனியில் இந்நேரங்கெட்ட நேரத்தில் எனக்காக இத்தனி ஒருவனுக்காக-கச்சேரி செய்வர். கர்நாடக சங்கீதமும், கஜல் இசையும் நிரம்பி வழியும் 'வைட் வெடிங்'கைக் காண என்னுள் சிரிப்புச் சிரிப்பாய் வரும்.

செ(f)ப்பின் தொந்தரவுகளற்ற பணிச்சுதந்திரம், சம்பளம் முதலிய காரணிகள், சிகரெட் புகைமண்டலம், அகாலவேளை வேலை போன்ற வியாகூலங்களையும் மீறி என்னை இவ்வேலையில் ஒட்டிவைக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாலை 4 மணிக்கு சுரங்க ரயில் நகர வேகரயில்களின் சேவை ஆரம்பித்து விடும். படிப்படியாக வீதியில் ஜன நடமாட்டம் அதிகரிக்கும். உற்சாகமாக வேலைக்குப் போவோர், முனகிக்கொண்டு போவோர், வின்ரர் காலமெனில் ஏழுமணிக்கு மேலும் புலராத பொழுதுகளில் பனிமழை பெய்தாலும் தவ்விக்கொண்டு பள்ளி செல்லும் பாலகர்கள், மாணவர்கள் இவர்களைப் பராக்குப்பார்ப்பதுவும் நல்ல பொழுது போக்குத்தான்!

பெர்லின் சுவர் வீழ்ந்த பின்..... ....

வெளி வெப்பநிலை பூச்சியத்திற்கும் கீழ் இருந்த ஒரு நாள், தரையை சூடான சோப் நீரில் தடித்த துணியை அமுக்கிப் பிழிந்து பிழிந்து மொப் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

கடை வாசலில் நீளக் கோட்டுப் போட்ட ஒரு கிழவன் நிற்கிறான். பனியும் தூவிக் கொண்டிருக்கிறது. அரை மணிக்கு மேலாகியும் மனிதன் நின்ற இடத்தை விட்டு அசைவதாகக் காணோம். பின்லாந்து வொட்கா அதிகம் குடித்தாலும் கால் தூக்கி வைக்க முடியாமல் போகும், பாவம். சும்மா சுவரைத் தொட்டுக் கொண்டு மணிக்கணக்கில் நிற்கும் பேர்வழிகளைப் பல தடவை பார்த்திருக்கிறேன்.

K.J.ஜேசுதாஸ்' கனகாங்கி' ராக கீர்த்தனை ஒன்று முடிய மிருதங்கக்காரருக்கும், கெஞ்சிரா, கடக்காரர்களுக்கும் தனி வாசிப்புக்கு போதிய இடம் கொடுத்து இருந்தார். கசெட் ஒரு பக்கம் ஓடி முடிந்து விட்டிருந்தது. மறுபக்கம் புரட்டி ஓட விடப் போன போது கிழவன் மெல்ல அசைந்தான். மீள் வார்ப்புக்காகக் கொண்டு செல்லப்படும் வெற்றுப் போத்தல் கலனுக்குள் வீசுவதற்காக நான் கதவுக்குள் வெளிப்புறமாக வைத்திருந்த வெற்று விஸ்க்கிப் போத்தல்களினுள் கிடந்த ஊறல்களை ஒவ்வொரு போத்தலாகத் தலைகீழாகக் கவிழ்த்து நாவில் விழவிட்டுச் சுவைத்தான். பரிதாபமாகவிருந்தது. கதவைத்திறந்து 'ஹலோ' என்றேன். எங்கே விரட்டிவிடுவேனோ என்பது போல் பார்த்தான்.

"இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

www.tamilarangam.net

"உள்ளேயிருந்து ஒரு புதுவகைச் சங்கீதம் வந்து கொண்டிந்ததே கேட்டுக் கொண்டிருந்தேன்...."

"உண்மையாகவா?" எனக்குச் சர்வ தேகமும் புல்லரித்தது. எமது சாஸ்த்திரிய சங்கீதத்தை ஒரு ஐரோப்பியன் கேட்டு ரசித்துள்ளான், வாங்!

"உள்ளே வாருங்கள் பேசலாம்"

'கிண்டல் பண்ணுகிறேனோ' என்று என்னைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். ஒரு நாற்காலியில் அமர வைத்தேன். பத்துநாள் தாடியில் பூத்திருந்த பனிப் பூக்கள் லைட் வெளிச்சத்தில் மின்னின.

"இந்த வகைச் சங்கீதத்தை முன்பு நீங்கள் கேட்டதேயில்லையா?"

"நான் இதுவரை பிறமக்கள் எவரினதும் இசையைக் கேட்க முடியாத ஒரு உலகில் '(கிழக்கே கையைக் காட்டினான்) வாழ்ந்து விட்டேன். அங்கிருந்து மீண்டு கொஞ்சக்காலந்தான்"

"மிகவும் உறைந்து போயுள்ளீர்கள். சூடாக ஒரு பால்க் கோப்பி தயாரிக்கவா?"

"நன்றி. மிகவும் நன்றி"

கொஞ்சம் Ameretto (மதுவகை)வும் சேர்க்கவா?"

"Net von dir (என்னே தாராள மனது)" பெருமையுடன் கசெட்டைத் தொடர்ந்து ஓடவிட்டுக் கோப்பியைத் தயாரித்தேன்.

"கேட்பதற்கு மன்னியுங்கள் இது அராபிய இசையா அல்லது இந்திய இசையா?"

"இது இந்திய சாஸ்திரீய சங்கீதம், இது கர்நாடகம் என்னும் வகை."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நன்றி. அருமையாகவுள்ளது. இதன் இலக்கணங்கள் எப்படியோ அறியேன் கேட்பதற்குப் பரவசமூட்டுவதாயுள்ளது."

ஒவ்வொரு வாத்தியத்தைப் பற்றியும் கேட்டான். கெஞ்சிரா ஒரு கையால் வாசிக்கப்படுவது என்பதை நம்ப மறுத்தான்.

"இவ்வளவு இசை பற்றிப் பேசுகிறீர்களே உங்களுக்கு இசை அனுபவங்கள் எப்படி ஏற்பட்டன?"

காப்பிக் கோப்பையைக் கீழே வைத்து விட்டு லேசாகச் சிரித்தான்.

"ஆரம்பத்தில் டிரேஸ்டனில் ஒரு சேர்ச் ஒன்றில் பியானோ வாசித்தேன். அப்போது நான் இளைஞன். அட அந்தக்காலம். மீண்டும் மௌனம்.

"உங்களை மிகவும் கவர்ந்த கொம்போஸர் யார்?" நான் J.S.Bach, Beethoven, Mozart என்று யாரையாவது சொல்வானென்று எதிர்பார்க்க நான் என்றுமே கேள்விப்படாத... Kowski என்று முடியும் ஒரு பெயர் சொன்னான். ரஷ்யனாகவோ ஆஸ்த்திரியனாகவோவிருக்கலாம்.

"இன்னொரு கப் கோப்பி சாப்பிடுகிறீர்களா அமெறெற்றோ சேர்த்து?"

நன்றியுடன் என்னைப் பார்த்தான் ஆமோதித்து.

இம்முறை மதுவை சற்று அதிகமாகவே கலந்து விட்டேன்.
காப்பிக்கப்பைக் கையில் எடுத்து கொஞ்சம் குடித்ததும் வாயால் மியூசிக் ஒன்று தானே போட்டபடியே சுழன்று நடனமாடத் தொடங்கினான். கோப்பிக் கப்புடன் சுழன்ற வேகத்தில் அதையும் போட்டுடைத்துத் தரையை இன்னொரு தரம் சுத்தம் செய்ய வைத்து விடுவானோ கிழவன் என்று பயந்தேன்.

"நண்பனே பயந்து விடாதே.... ஒ...லலலல்லா...லலலல்லா ஜிகபம்...ஜிகபம்...ஜிகபம்" ஆட்டம் வேகம் பிடித்தது. ஒரு துளியும் கோப்பி சிந்தாதபடி கப்பை இரு கைகளுக்கும் மாற்றி மாற்றிச் சுழன்று சுழன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடினான்.

ஒருவாறு ஆட்டம் முடிந்த பின் சொன்னான். "எனக்கு கெல்னர் (பரிசாரகர்) வேலையிலும் 12 வருஷம் அனுபவம் இருக்கு ஒரு கோப்பையும் உடைக்கமாட்டேன்.....உமது அன்பான உபசரிப்புக்கு நன்றி...சென்று வரவா?"

"சென்று வாருங்கள் நாம் அடிக்கடி சந்திக்கலாம், ஒரே யொரு சந்தேகம்....நீங்கள் ஏன் தொடர்ந்து இசைத்துறையில் சேவை செய்யவில்லை?"

"இப்ப மியூசிக் போடு... இப்ப தூங்கு...இப்ப எழுந்திரு என்று கொமாண்ட் பண்றான்யா...Quatsch (பைத்தியக்காரத்தனம்)!"

"நீங்கள் பார்த்தவரையில் மேற்கு ஜெர்மனி பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

"முன்பு எனக்கு மேற்கு ஜேர்மனியினுள் ஓடிவந்து விட வேண்டுமென்ற துடிப்பும் வேகமும் இருந்தது. அவர்கள் அனுமதிக்கவில்லை. இப்போது வரமுடிகிறது, எதனையும் பார்க்கும் ஆர்வம் தான் போய்விட்டது.

.....நன்றி Schön Tag noch (வந்தனம்)." புறப்பட்டுவிட்டான்.

அதன் பின் மீண்டும் அவனை நான் காணவில்லை.

இந்தப்படம்.....இந்தப்படத்திலிருப்பது அன்று என்னிடம் கோப்பி அருந்திய மாமேதையேதான்!.

மனைவி சொன்னது போல் அவரின் நடு வயதுப் படம்தான் பத்திரிகைக்குக் கிடைத்துள்ளது. மற்றும்படி அந்த நெற்றியும்,நாசியும்,கண்களும் ஒன்று சேர சாட்சாத் அவரே தான்!.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டினுள் கிழக்கு. ஜெர்மன் ஜனநாயகக்(?) குடியரசு மக்களிடையே சர்வாதிகாரத்தைப் பிரயோகித்தபோதெல்லாம் அரசைப் பகிரங்கமாகக் கண்டித்தார். ஆத்திரமடைந்த அரசு பல்கலைக்கழகத்திலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவரை இராணுவத்தின் இசைப்பிரிவு ஆலோசகராக நியமித்தது.1950 ல் தனது பதவியை இராஜினாமா செய்தார். Leipzig Thomas தேவாலய கோரஸில் சேர்ந்து பல Ballet நடன நிகழ்வுகளையும் இசை அமைத்து இயக்கினார்

இவர் தன் இசை ஆய்வுகளையும், கையெழுத்துப் பிரதிகளாயிருந்த நூல்களையும் Amsterdam ல் ஒரு பிரசுரக் கொம்பனிக்கும் அரசின் அனுமதியின்றி விற்றார் என்றும் அவற்றை அவை வேறொரு பெயரில் வெளிக்கொணர்ந்தன என்றும் குற்றஞ்சாட்டி அரசு இவர் மேல் வழக்குத் தொடர்ந்தது. இதனால் இவர் சில வருடங்கள் சிறையும் அனுபவிக்க நேரிட்டது.

இவர் சிறை அனுபவித்தகாலத்தில் இவர் மனைவி வேறொருவருடன் வாழத்தலைப்பட்டதில் மணவாழ்விலும் முறிவையே சந்தித்தவர்; விடுதலையான பின் சில காலம் மன நோய்வாய்ப்பட்டு இருந்ததாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் உள்ளன.

தன் அந்திமகாலம் வரையில் இசைத் துறையிலிருந்து 'அஞ்ஞாதவாசம்' செய்த இவர் ஜீவனோபாயத்திற்கு Potsdamm ல் ஒரு விருந்தினர் மாளிகையில் பரிசாரகராகப் பணியாற்றினார். தனது 34 வயதிற்குள்ளேயே இசை உலகச் சாதனைகள் பலவற்றின் சிகரங்களையும் தொட்டு இந்நூற்றாண்டின் தலை சிறந்த இசைச் சித்தர்களுள் ஒருவராக மதிக்கப்படும் திருவாளர் J.J.Karl Murphy,Berlin Rudolf–Virchow மருத்துவமனையில் நேற்று மாலை தன் 77வது வயதில் மாரடைப்பால் காலமானார்.

'ணங் ணொங்'...'ணங் ணொங்'

கதவு மணி அடிபட்டது.

"கேக் எடுத்துப் போக ஆட்கள் வந்திட்டினம்.... கதவைத் திறவுங்கோப்பா...."

மனைவியின் கூவலில் 'என் அமைதி' மீண்டும் அறுபட்டது!.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைச்செல்வன்



## சூடுகளும் குயில்களும்

எந்த முட்டாள் சிகரெட்டை அணைக்க மறந்துபோய் படுக்கைக்குப் போனானோ தெரியவில்லை, அந்த விடிந்தும் விடியாத வேளையில் பேரோசை கிளப்பிக் கொண்டு போன 'பொம்பியே'யின் (தீயணைக்கும்படை) சத்தத்தால்தான் பரமலிங்கம் தூக்கம் கலைந்தார் என்றில்லை. அவர் எப்போதோ விழித்து விட்டிருந்தார். நினைவில் அவரது தாயின் கடிதம் வயலின் வாசித்துக் கொண்டிருந்தது, அவரோகண லயத்தில்.

"தம்பி பரமு, காசு கழஞ்சி கையிலை இல்லை; உன்னைத்தான்ரா நம்பியிருக்கிறன்; நான் சாகும் முன்னம் ஒருக்கா உன்னைப் பார்க்க ஆசை. முடிஞ்சா வந்திட்டுப் போடாமோனை."

கட்டுவனைச் சேர்ந்த கலைச்செல்வனின் 'காற்றிலேறி...', 'பிச்சை' ஆகிய சிறுகதைகள் சக்தி, தூண்டில் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இவர் EXIL வெளியீட்டகத்தின் இயக்குனர். பிரான்ஸிலிருந்து வெளிவந்த தேடல், பள்ளம் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் ஒருவர். இவரது சிறுகதைகள் இடப்பெயர் சமூகத்தின் மாறுபட்ட வாழ்வியல் பரிமாணத்தைப் பிரதிபலிப்பவை. தமிழர்களின் ஐரோப்பிய இலக்கிய முயற்சிகளின் வரலாற்றைக் குறித்து வருபவர்.

www.tamilarangam.net

பரமலிங்கமும் பலதடவை ஊருக்குப்போய்த் தாயைப் பார்த்து விட்டுவர முயற்சித்தார்தான். அவர் கையிலையும் காசு கழஞ்சு இல்லை. வயசு வளர முன்னம் நஞ்சை விழுங்கி நரையும் விழுந்திட்டுது. ஏதோ இருக்கிறதைக் கொண்டாவது போய்வருவம் என்றாலும் இயந்திர மனிதர்கள் நடமாடும் நாடு என்று நெஞ்சில் ஒரு பிசாசுப்பயம் ஏறுகின்றது.

ஒன்றும் வேண்டாம் போகட்டும், அம்மா ஊரில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருப்பதற்காவது ஏதாவது அனுப்பிக் கொண்டிருப்பதே போதும் என்று அங்கலாச்ச மனசுக்கு அறைந்து ஒரு பூட்டுப்போட்டுப் பூட்டிவிட்டார். அதற்குள் அம்மா அந்த மருமோனை அங்கை கூப்பிடு, இந்த மருமோனை இஞ்ச கூப்பிடு, இருந்தா இதுகளும் இல்லாமல் போயிடும் என்று எழுதிக்கொண்டுதான் இருக்கிறா. எப்படியாவது இன்றைக்கு காசு அனுப்ப வேண்டும் என்ற தன் முடிவுக்கு பெருமூச்சு முத்தாய்ப்பு வைத்துவிட்டு மங்களம் பக்கம் திரும்பினார். மங்களம் எப்போதோ எழும்பியிருக்க வேண்டும், முகட்டைப்பார்த்துக் கண்ணை அடிக்கடி வெட்டிக்கொண்டிருந்தாள். "உனக்கென்ன யோசனை?" சற்று செருமிக்கொண்டு கேட்டார்.

எப்போதும் பொறுப்பும் யோசனையும் ஆம்பிளையளுக்கு மட்டும்தான் வரும் என்ற macho எண்ணம் பதினைந்து வருடகால பாரிஸ் சீவியத்தைப் பண்ணிப்பார் என்றது.

"இல்லை இன்றைக்கு சுபாங்கியின் பிறந்தநாள் எல்லோ?" மெல்லிய உவகை முகத்தில் மின்னியது.

ம்...கூட்டிய பரமலிங்கம் எதுவும் பேசவில்லை. "அவள் இன்று வருவாளா?"

"ம்...வருவாள்" அவர் தன் மகளைப்பற்றி நிறையவே நினைத்துக்கொண்டாலும் எதையும் மங்களத்தோடு பெரிதாகப் பகிர்ந்து கொள்வதில்லை. மகளைப்பற்றி எது கதைத்தாலும் இறுதியில் தான் அழுவதோடுதான் கதைமுடியும் என்பதால் மங்களமும் பெரிதாக ஒன்றும் எதிர்பார்ப்பதும் இல்லை.

நாங்கள் அக்காலத்து ஆட்கள், பிள்ளைகள் இக்காலத்துப்பிள்ளைகள்.

எங்கள்நாடு இலங்கை, பிள்ளை பிரான்ஸ்.

நாங்கள் தமிழ்(?)கலாசாரம், பிள்ளை பிரஞ்சுக் கலாசாரம்.

நாங்கள் தமிழ், பிள்ளை பிரெஞ்ஷ். இது பரமலிங்கம் விவாதம்.

என்னதான் இருந்தாலும் பிள்ளை எங்கட பிள்ளை. எங்களுக்கு என்றொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாசாரம் இருக்கு. அதிலதான் வளர வேணும். பிள்ளை, கலாசாரத்தின் பிள்ளை. இது மங்களம் பக்கம்.

இந்த விவாதங்களுக்குள் எப்பவும் சுபாங்கி அகப்படவே இல்லை. தமிழுக்காகவோ- கலாச்சாரத்திற்காகவோ, அக்காலத்திற்கோ- இக்காலத்திற்கோ எதிலும் அவளுக்கு அக்கறையில்லை. அந்த லிஸ்ரில் அம்மா அப்பாவும் அடக்கம்.

மங்களம் கட்டிலைவிட்டு எழுந்து போய்விட்டாள். அவள் தன் வழமையான சம்பளமில்லாத வேலையைத் தொடங்கிவிட்டாள் என்பது குசினிச் சத்தத்தில் தெரிந்தது.

பரமலிங்கத்திற்கு எழும்ப மனமில்லை. இரண்டு தாய்களும் சுற்றிச் சுற்றி, மாறிமாறிக் கயிறிழுத்தனர்.

'உன்னை நம்பித்தான்ரா இருக்கிறன்'- அம்மா.

இடையிடையே அக்கா தங்கைகள்.

'பிள்ளையை இப்படியே விட்டால் நாளைக்கு நாங்கள் யாரை நம்பியிருக்கிறது"- மங்களம்

'நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறன்'.

'ம்... இப்பவே பொண்டிப்போனியள் இனியெங்கை!

தன்னை வித்து தமக்கைக்கும் கழுத்தில் மாட்டி நாலு வருஷம். இதற்கிடையில் மங்களத்தின் மடியில் சுபாங்கி.

எழுபத்தியேழுக் கலவரம்.

சுற்றம் சூழ உள்ள இளசுகளைப் போல் இயந்திரம் தின்ன பரமலிங்கம் பிரான்சுக்கு வந்தவர். வந்தவர் உழைக்க என்று சொல்லுறதைவிட மற்ற இரு தங்கைகளையும் பிடிச்சுக்கொடுக்க வந்தவர் என்பதுதான் அதிகப் பொருத்தம்.

சின்ன வயசிலேயே தேப்பனைத்திண்டிட்டு ஒவ்வொரு கவளம் வாயில் போடேக்கையும் 'மூன்று குமரடா' என்ற தாயின் முனகலோடு வளர்ந்தவர்.

வந்ததுதான் வந்தவர், தூளோடு வந்தாரே! அப்படி வந்தவர்கள் எல்லாம் அப்பவே வீடும் வாங்கி ....

பரமலிங்கம் பன்னிரண்டு பேருடன் *கெத்தை(Gaite) யில் தங்கும் பாக்கியம்தான்...

அது ஒரு தொடர் மாடிக்கட்டிடம்.எந்த நேரத்திலும் இடிந்து விழலாம் மாதிரி! தங்கியிருந்த எல்லாருமே 'ஆண்ட பரம்பரை'யின் வாரிசுகள்!

எல்லாருக்குமாகக் கீழ் மாடியில் ஒரேயொரு மலசலகூடம்.காலமை கக்கூசடியில் இவர்களுக்காகத்தண்ணீர்ப் போத்தல்கள் கியூவில் தவமிருக்கும் நிலமை. குடியிருந்த கட்டடத்தைக் 'கொண்டெம்' பண்ணி குண்டிக்கு அலவாங்கு கொடுத்துத் தெண்டியும் சனங்கள் எழும்பவில்லை.
'எலக்றிசிற்றி கட்' பண்ணி நடு அறையுக்கை பென்னம் பெரிய ஓட்டையள் போட்டும் ம்...ஊம். எங்கை போறது?

வீட்டுக்கு வீடு வாசற்படி- எவன் வீட்டுக்குப்போனாலும், அவன் அடுப்படியில் தலைவைக்கிறான். இவன் கக்கூசுக்குள் கால் போடுகிறான். இப்படித்தான் இஞ்சை படுத்தெழும்புறாங்கள் என்று குந்தியிருந்து கோப்பி குடிக்கவும் சங்கடப்படுத்தி அனுப்பிப்போடுவாங்கள். வேறயெங்கை போறது. வேலைதேடப்போறது. பசிச்சா சுப்பமார்க்கெற்றுக்குள் சாமான் தேடுகிறமாதிரி எதையாவது கொறிச்சு cokeகையும் குடிச்சிட்டு வெளியில வாறது. இப்படியொருக்கா வருகிறபோதுதான் எல்லாருடைய உடுப்பு பொக்கிஷங்கள் எல்லாம் அறையுக்கை இருக்கத்தக்கதாகவே பொலிசு கதவுக்கு கல்லடுக்கி மூடியே விட்டுப்போனது. அதோடை றோட்டுக்கு வந்தவர். தற்கொலை எண்ணம் கூடத் தலை நீட்டியது. குசினிப்பொட்டுக்கை நாய் தலை நீட்டையுக்கை தாயார் அங்கு மட்டையாலை அடிக்கிற மாதிரி, தாயில் இருந்து சுபாங்கி வரை எல்லாருமாய்ச் சேர்ந்து தற்கொலைக்கு சணல் அடி.
அவர்கள் எதிர்பார்ப்பு ,வாழ்க்கை,கடவுள் எல்லாம் நிஜத்தில் நானே என்று மனசில் வைச்சிரம் காச்சி ஊற்றியவர்தான்.இன்னும் அந்த வச்சிரம் பழுதாய்ப் போய் விடவில்லை.

இடையில் வேண்டாம் இந்த பரி(சு)ஸ் கெட்டவாழ்க்கை என்று நாட்டுக்குத்திரும்ப யோசித்த போது சுட்ட பன்றியைக்கூட இறந்த பின்பே கருக்கும் மனிதர்கள்,மனிதர்களையே உயிருடன் கருக்கும் நிலைக்கு வளர்ந்திருந்தனர்.

பெடியன் வந்து இஞ்சை வேகவேணுமோ என நினைத்த தாய்-விசயம் இதுதான் என்று மங்களத்தையும் மகளையும் பிடிச்சு அனுப்பிவிட்டார். பதினைஞ்சு வருசம். சிறைக்குள் இருந்த மாதிரி உழைச்சு உழைச்சு ஒரு மிச்சமும் இல்லை. சுபாங்கி மட்டும்.....பார்த்தால் நெஞ்சில் ஒரு பெருமிதம் மிஞ்சும். அவ்வளவுதான்.

www.tamilarangam.net

மங்களம் கோப்பியோடு வந்தாள்.

"இந்தக் கிழமை முழுக்க மகள் போன் பண்ணவில்லை. நீங்களாதல் ஒருக்கால் போன் பண்ணியிருக்கலாம்"
"ஏன் நீ பண்ணியிருக்கலாமே?.."
"இப்ப சொல்லுவியள்.பேந்து அவளை ஏன் இடைஞ்சல் படுத்துகிறாய் என்பியள்".
உண்மைதான்.வளர்ந்த பிள்ளைகளுக்குப் பெற்றோருடன் கதைக்கப் பேசப் பெரிதாக எதுவும் இருப்பதில்லை-ஆனால் இந்தப் பெற்றோருக்கு நிறையவேதான் இருக்குமே- தன்பாட்டுக்கே நிறையக் கதைத்துக்கொண்டிருப்பார்கள்-பிள்ளைதான் முழு உலகமும் ஆகி.....
இரண்டு வரிக்கு மிஞ்சி அவளுடன் கதைக்க வெளிக்கிட்டால் ஏன் அம்மா அறுக்கிறீங்கள் என்று கேட்காத குறை.இனி அம்மா கொஞ்சம் நீட்டி நிமிர்த்தி, "வேலைக்குப் போறியா?.காசை என்ன செய்யிறாய்?- இரவு போன் பண்ணினன் காணேல்ல"-என்றால்
" இது எல்லாம் என்சொந்த விசயம் இதையெல்லாம் ஏன் நீங்கள் கேட்கின்றீர்கள்" என்ற கேள்வி வந்தாலும் வரலாம். அவள் வயசு அப்படி.

மங்களம் இதையெல்லாம் தாங்கிக்கொள்ள மாட்டாள். இதனால்தான் பரமலிங்கத்தார் அடிக்கடி போன் பண்ணுவதை விரும்பவில்லை. மங்களம் குசினிக்குள்ளேயே இருந்தாள். பரமலிங்கம் கோப்பிக் கப்போடு குசினிக்குள் நுழைந்தபோது அந்த மாதிரி ஒரு சமையல் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.
"இன்றைக்கு அம்மாவுக்கு காசு அனுப்ப வேணும். பாங்கிலை கிடக்கிறது காணுமோ தெரியாது."
முகம் கழுவியபடி முணு முணுத்த பரமலிங்கம்.

"சுபாங்கிக்கு போன் பண்ணிக் கொஞ்சக் காசு கேட்டுப்பாருமன் " என்றவர் உடனே

"வேண்டாம், அவளின் எடுப்புச் சாய்ப்புக்கே அவளின் சம்பளம் போதாது இதற்குள் நான் கேட்க ! வேண்டாம் கிடக்கிறதை எப்படியும்...."!
ரெலிபோன் மணியடித்தது. பரமலிங்கம் நகருமுன் மங்களம் ரிசிவரைத் தூக்கினாள். கதையில் சுபாங்கிதான் என்பது புலனானது. பறுவமாகிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதைத்தவள் தேய்பிறையாய் நழுவி சரி சரி என்ற முணுமுணுப்போடு அமாவாசையாகி ரிசீவரை வைத்தாள்.
என்னவாம் என்பது போல் பார்த்தார் பரமலிங்கம்
"வேலைக்குப் போகிறாளாம் பின்னேரம் இஞ்சை வருவாளாம்"
"வாறாள்தானே பேந்தென்ன"என்று முணுமுணுத்துக் கொண்டாலும் பரமலிங்கத்திற்கு மங்களத்தின் நிலை விளங்காமல் இல்லை.

"உதிலை பாங்கிற்கு ஒருக்கா இறங்கியிட்டு வாறன்" பரமலிங்கம் படியிறங்கினார். தாயும் மகளும் வந்தபோதும் அவர் இப்படியொரு ஆறாம் மாடியில்தான் இருந்தார்.அது ஒரு குஞ்சு அறை. பதினைந்து சதுரமீற்றரும் தேறாது. குசினி குளியலெல்லாம் அதற்குள்தான். மங்களம் சுபாங்கியை வளர்க்க மிகவும் கஷ்ரப்பட்டாள். அவளுக்கும் எட்டு வயசுவர இந்த வீட்டுக்கு வந்தார்கள்.
தலையை நீட்டிப்பின்ன கழுத்தோடு வெட்டு என்று தொடங்கிய சண்டை, சங்கீதம் பழக யாஸ் (jazz)பழகி,வீணை பழக கிற்றார் பழகி பரதநாட்டியம் பழக டிஸ்கோ பழகி நீண்டது.
மங்களமும் 'லா சப்பெலில்' (La Chappelle)எத்தனையோ சேலைகள் வேண்டிப்பார்த்தாள். அவள் ஒரு நாள் கூடக் கட்டிப்பார்த்ததில்லை. மங்களமும் எவ்வளவோ செய்து பார்த்தும் அவளிடம் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பைக் கண்டு பிடிக்கவும் முடியவில்லை. இறுதியில் இந்தச் சண்டை அப்பர் அம்மா ஒருநாட்டுப்புறத்தாக்கள் என்று கருதத்தான் வைத்தது.
அவள் விரும்பியதெல்லாம் செய்து கொடுக்க முடிந்தவரை கஷ்ரப்பட்டார் பரமலிங்கம்.
அவளைச் சந்தோசப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் மட்டுமல்ல, பிரஞ்சுமொழியும் பிரெஞ்சு வாழ்க்கை முறையும் தெரியாப் பாமரத்தனமும் தான். மகள் கேட்பதெல்லாம் சரி பிழைக்கப்பால்
"பிரெஞ்சுப் பிள்ளைகள் இப்படித்தான் இருப்பார்களாம்" என்று விட்டு விட்டார்.
பிள்ளையும் வளர பிரச்சனைகளும் வளர்ந்தன. பிரெஞ்சில் படித்து வளர்வதால் தமிழில் சரளமாகப் பேசக் கஷ்ரப்பட்டாள். உற்சாகமாக இருக்கும் போதும் உணர்ச்சி வசப்படும்போதும் பிரெஞ்சில் கதைத்தாள். அப்பர் அம்மாவிற்கு விளங்குவதில்லை என்பதால் நாளடைவில் கதைப்பதும் குறைந்து விட்டது. ஒரு வகை ஊமை உறவு. ஊமை வாழ்க்கை. வெளியில் சென்றால் நண்பர்களை வீட்டுக்கு கூட்டிவர முடியவில்லை. 'பூபெல்' தளபாடங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிரம்பியது தான் தன்வீடு என்ற தாழ்வு மனப்பான்மையை விட, அப்பர் அம்மாவின் பிரெஞ்சுக்கடலில் அவள் தற்கொலை செய்து கொள்வாள்.

இதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்துகொண்ட பரமலிங்கம் ஒருநாள் மங்களத்திற்குசொல்லிக்கொண்டார். "ஊரில எங்களுக்கு ஆயிரம் உறவுகள்.அண்ணன் தம்பி மச்சான்-மச்சாள் சித்தப்பா-பெரியப்பா, மாமா, மாமி....உரிமை கொண்டாட ஊரெல்லாம் உறவுகள். அவளுக்கு யார்? இங்கே அவளுக்கு நல்ல நண்பர்கள்தான் உறவுகள். அதற்கு நாம் ஒருபோதும் இடைஞ்சலாக இருக்கக் கூடாது.
வயசும் பதினாறாக ஒரு 'கொப்பனும்' நெருக்கமானது. வெள்ளி பகல் நீண்டது. சில இரவுகளுக்கும் வீடு இல்லாமல் போனது. பரமலிங்கத்தாரும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். மங்களமும் மன்றாடிப்பார்த்தாள். அவர்களைப்பொறுத்த வரை கற்புடன் ஒரு கலியாணம் காட்சியை பார்த்து விட வேண்டும் என்ற ஆவல்தான் . சுபாங்கி முடிவாகச் சொல்லி விட்டாள். "நான் உங்களை எல்லோருக்கும் மேலாக நேசிக்கின்றேன். அதைவிட என் சுதந்திரம், என் சந்தோசத்திற்கும் ஏன் உங்கள் சந்தோசத்திற்கும் மிக முக்கியமானது. நானே ஒருநல்ல துணையை உருவாக்குகின்றேன். நீங்கள் தயவு செய்து இடைஞ்சல் செய்யாதீர்கள்."

மங்களம் இதற்கு மிஞ்சி மூச்சும் காட்டவில்லை. பரமலிங்கமும் அடங்கிவிட்டார், சற்று நாட்களுக்கு முன் சார்சலில்(Sarcelles) நடந்த அந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. மாடி வீட்டிற்குள் அடக்கிவைக்க முனைந்ததால் வெளியில் பாய்ந்து கோமாவில் இருக்கும் அந்தப் பதினெட்டு வயதுப்பெண்.
இரண்டு வருஷங்கள் பாரிசில் இருந்து தூரஉள்ள யூனிவர்சிற்றியில் இருந்தாள். பாரிஸ் வந்ததும் தன் 'கொப்பன்'உடன் தங்கிவிட்டாள். பரமலிங்கத்தார் நூலில் தொங்கும் உறவு அறுந்து போகக் கூடாது என்று அவளிஷ்டப்படியே விட்டு விட்டார். அவள் புறம்பாக இருந்தாளேயொழிய மற்றும்படி அவளுக்குத் தங்கள் மேல் இருந்த பாசம் குறைந்த மாதிரித் தெரியவில்லை. ஆரம்பத்தில் அடிக்கடி வந்தாள் இப்போது இடையிடையே வருகிறாள். வருகிறபோது தன்வீடு மாதிரியே எல்லாம் பண்ணிக்கொண்டு சிலவேளைகளில் இங்கேயே தங்கியும் விடுகிறாள்.
எல்லாம் நாம் ஒரு குடும்பம் மாதிரியே காட்டிக்கொண்டாலும்

www.tamilarangam.net

ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை இடைஞ்சல் செய்வதில்லை. அவ்வளவுதான். தாய் பிள்ளை உறவின் முழுப்பரிமாணங்களும் இவ்வளவுதான் என்பது போலாகிவிட்டது. பரமலிங்கம் வீடு திரும்பியபோது அந்தமாதிரிச் சமையல் அரைகுறையாகியிருந்தது. அது இரவுக்கு இடம்பெயர்ந்திருக்க வேண்டும்.

மாலை மகள் வந்தாள். பெரிய அழகிய பூங்கொத்தை தாயிடம் கொடுத்தாள். இருவரையும் ஆசையாகக் கொஞ்சினாள். அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்று தாய் செய்து வைத்திருந்த 'கட்லற்'றை அடிக்கடி சாப்பிட்டாள். அவள் முகத்தின் மலர்வையே தான் பெற்ற பாக்கியம் என்று அவளையே வலம் வந்துகொண்டிருந்தாள் மங்களம்.

பரமலிங்கம் வாங்கி வந்த 'கத்தோ' வை வெட்டி ஒரு கோப்பியும் குடித்த கையுடன் சுபாங்கி எழுந்தாள். "இரவு கொப்பனோடு ரெஸ்ரோறன்றுக்கு போகிறேன்" என்று மிக இயல்பாகவே சொல்லி விட்டு மீண்டும் மீண்டும் அழுத்திக் கொஞ்சி

"நீங்கள் ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும்" என்று வாழ்த்திப் போய் விட்டாள்.

ஆசையாகச் செய்த புரியாணி மேசையில் அலட்சியமாகச் சிரித்தாலும், விக்கித்துப்போய் நின்ற மங்களத்தை தாங்கி அணைத்துக்கொண்டு உள்ளே போகிறாரே பரமலிங்கம்!

ஓ! அவள் மீண்டும் வருவாள்!

அடிக்குறிப்புகள்:

~~~~~~~~~~~~~~

**சார்செல்-Sarcelles:**

**பாரிசின் நகர்ப் பகுதிகளில் ஒன்று. அல்ஜீரியர்கள், ஆபிரிக்கர்கள், இலங்கைத் தமிழர்கள் போன்ற வெளிநாட்டவர்கள் செறிந்து வாழும் பகுதி.**

**லா சப்பெல்-La Chapelle:**

**பாரிஸ் நகரின் ஒரு பகுதி. தமிழர்தெரு என்று கூறும் அளவுக்கு சகல விதமான**
~~~~~~~~~~~~~~

www.tamilarangam.net

பொருட்களையும் விற்பனை செய்யும் தமிழ்க்கடைகள் நிறைய உண்டு.

கெத்தே-Gaite:

இப்பெயரில் ஒரு மெட்ரோ ஸ்ரேசன் உண்டு. இந்தப் பழைய தொடர் மாடிக்கட்டிடங்கள் இடிக்கப்பட்டு இப்போது அந்த இடத்தில் புதிய அழகிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கத்தோ-Cake–கேக்

கொப்பன்-Copain–காதலன்(Boy friend)

பூபெல்-Poubelle–குப்பைவாளி

www.tamilarangam.net

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



# இரவில் வந்தவர்

அவள் குழந்தைகளைப் படுக்கையில் போட்டாள். ஓலையால் வேய்ந்த வீடு. ஓட்டைகளுக்குள் பாதி நிலாவின் துண்டுகள் எட்டிப் பார்க்கின்றன. இப்போதெல்லாம் நிலவு வெளிச்சத்தில் குழந்தைகள் விளையாடுவதில்லை. கோயில் மணியோசையும் குழந்தைகளின் கலகலப்பும் எப்போதோ சூனியமாகிவிட்டன.

சத்தியா குழந்தையாயிருக்கும்போது நடந்த எத்தனையோ நிகழ்ச்சிகள் இன்றும் இனிமையாக இருக்கிறது. நினைவுகளைத் தவிர வேறெதுவும் இனிமையில்லை.

அக்கரைப்பற்று – கோளாவில் இவரது பிறப்பிடம். இருபது வருடங்களுக்கு மேல் லண்டனில் வாழ்பவர். 'ஒரு கோடை விடுமுறை', 'தில்லையாற்றங் கரையில்', 'உலகமெல்லாம் வியாபாரிகள்', 'தேம்ஸ் நதிக்கரையில்' நாவல்கள் இவருடையவை.தேர்ந்த சிறுகதை எழுத்தாளர். திரைப்படத் தயாரிப்பாளராகப் பயின்ற இவர் மனித உரிமை இயக்கம், பெண்கள் சுகநல இயக்கம் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்.

www.tamilarangam.net

பெரிய குழந்தை பானுவுக்குப் பத்து வயதாகிறது. அவள் நித்திரை வராமல் புரண்டு படுக்கிறாள். சின்னமகன் கேசவனுக்கு எட்டு வயது அவன் பகலெல்லாம் ஓடிவிளையாடிய களைப்பில் நித்திரையாகி விட்டான்.

அவள் வீட்டுக் கதவைச் சாத்திவிட்டு வெளியில் வந்தாள். அவளும் நிலவும் ஒருத்தரை ஒருத்தர் முட்டிக் கொண்டனர். கிணற்றடி மல்லிகையிலிருந்து குப்பென்ற மணம் தானும் சேர்ந்து தென்றலுடன் தவழ்ந்து வந்து அவள் நாசியில் நுழைந்தது.

தூரத்தில் யாரோ அழும் சத்தம். வாய் விட்டழாதசத்தம். யாரும் செத்துப் போயிருக்கலாம்.

இறப்புகள் எப்போதும் துப்பாக்கிக் குண்டுகளில் காத்திருப்பதில்லை. 'இந்த நாய்களுக்கு ஏன் ஒரு குண்டை வீணாக்கவேண்டும்' என்று சொல்லும் விடுதலை வீரர்களின் காற்சப்பாத்து ஒரு உயிரைப் பலிவாங்க ஒரு நாளும் தயங்கியதில்லை.

அவள் கணவனை ஒரு காலத்தில் சிங்கள அரசாங்கம் பிடித்துக் கொண்டு போனது. கேசவன் அப்போது கைக்குழந்தை. மகாவீரர்களாகப் போஸ்டர் போட்டு மரியாதை செலுத்தப்படாமற் செத்துப் போன எத்தனையோ இளைஞர்களில் அவனும் ஒருத்தன்.

தனிமை, சுமை, குடும்பம், இளமை, அழகு, இத்தனையும் சத்தியாவின் சொத்துக்கள். தாய் தகப்பன் எப்போதோ இறந்து விட்டார்கள். ஒரே ஒரு தமயன், கொழும்பிலேயே தங்கிவிட்டான். யாழ்ப்பாணம் எட்டிப் பார்க்கப் பயம்.

சத்தியாவின் தனிமைக்குத் துணையாய் வந்தவன் நடராஜனின் சினேகிதன்.
எண்பதாம் ஆண்டுகளில் கச்சை கட்டிக்கொண்டு கட்சி பிரித்த குழுக்களுள் சேராதவர்கள் புடவைக் கடைகளுக்குப் பிள்ளையார் துணிக்கடை, கணேசர் சாரி எம்போரியம், விநாயகர் சாரி பலஸ், கணபதி சேலைக்கடை, விக்னேஸ் துணிமாளிகை என்றெல்லாம் பெயர் வைப்பது போல் எத்தனையோ தமிழியக்கங்கள் கண்ணைக் கவரும், காதைக் குளிர வைக்கும், வீரத்தைப் பொங்க வைக்கும் பல கவர்ச்சியான பெயர்களை வைத்துக்கொண்டு

www.tamilarangam.net

விடுதலைக்கு வெளிக்கிட்டபோது, நடராஜனும் பாலேந்திரனும் பார்வையாளராக இருந்தார்கள்.

சத்யா குழந்தை சுமக்க, நடராஜன் குடும்பம் சுமந்தான். காதலித்துக் கலியாணம் செய்து கொண்டவர்கள்.சந்தையில் நடராஜன் சின்னக் கடை வைத்திருந்தான். வியாபாரம் நன்றாக வந்து, கையில் காசு வந்ததும் வீட்டைத் திருத்திக் கட்டி ஓடு போடுவதாக யோசனை.

கனவு அவன் கற்பனையாக மாறிப்போக இலங்கை ராணுவம் சுன்னாகத்தை எரித்து விட்டது. அவன் உடைந்து போனான். ஓலை வீடு ஓட்டை கண்டது. சத்தியாவின் நம்பிக்கை எதிர்காலத்துக்கு வழிகாட்டியது.

"பிரச்சினைகள் தீரும், கடவுள் வழி காட்டுவார்" அவள் கணவனுக்கு அன்புடன் சொன்னாள். அவள் குரல் கடவுளுக்குக் கேட்கவில்லையோ என்னவோ பிரச்சினைகள் கூடிக்கொண்டு வந்தது.

83ம் ஆண்டு கலவரம். இலங்கைத் தமிழர்கள், தாங்கள் பிறந்த நாட்டிலேயே அகதிகள். நடராஜன் ஏதோ கிடைத்த வேலைகளைச் செய்து பிழைத்துக் கொண்டான்.

வீட்டுக்கு வீடு பிரச்சினை, போராட்டம், ஊர்வலங்கள், உற்சாக கோஷங்கள். ஈழம் கெதியில் கிடைத்து விடும்; எல்லோர் (?) மனதிலும் நம்பிக்கை.

84ம் ஆண்டு ஊர்களில் திருட்டு. ஒரு இயக்கத்தின் பெயரில் இன்னொரு இயக்கத் திருட்டு.நடராஜன் வியாபார விடயமாக கொழும்புக்குப் போனவன் திரும்பி வரவில்லை.

கைக் குழந்தையுடன் சத்தியா கதறியதைக் கடவுள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். கையில் கழுத்தில் கிடந்தவை ஒவ்வொன்றாய்ப் போய்க் கொண்டிருந்தன. தமயன் தன்னால் முடிந்ததை எப்போதோ இருந்து அனுப்புவான்.

கடவுளே நான் யாருக்கு என்ன செய்தேன். எனக்கேன் இந்த விதி அந்தப்

www.tamilarangam.net

பத்தினியின் பரிதாபம் எந்தக் கடவுளுக்கும் விளங்கவில்லை. பானுமதி பசியால் துவண்டபோது, கேசவன் பாலுக்குத் தாயின் முலையைப் புண்ணாக்கிய போது அவள் கண்ணீரும் சில வேளை வற்றிவிடும்.

85ம் ஆண்டு ஒரு இயக்கம் ஒரு இயக்கத்தை மனித வேட்டை செய்தார்கள். சந்திகளில் வைத்து எதிரியக்க இளைஞர்களைப் பச்சை ஒலைகளும், கார் டயர்களும் போட்டெரிப்பதைப் பண்பட்ட தமிழ் தாய்மார் வேலியால் எட்டிப் பார்த்துக் கொண்டார்கள்.

கோயிற் திருவிழாக்களுக்கும் கொடும் கொலைகளுக்கும் வித்தியாசம் தெரியாத மனித மந்தைகள்,தெரு திரண்டு, விழியுயர்த்தி, வாய்திறந்து, மனமுடையப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சத்தியாவும் மற்ற மனிதர்கள் போல் கொடுமைகளுக்குள் குருடியாய், ஊமையாய்ச், செவிடாய்ப் பழகி விட்டாள்.

சத்தியா குடத்தில் நீர் வழித்து முகத்தைக் கழுவிக் கொண்டாள். மனம் எரிந்து கொண்டிருந்தது.

இப்படியவள் நிம்மதியில்லாமல் தவித்த ஒரு இரவில் பாலேந்திரன் வந்து சேர்ந்தான்.

"என்னையவர்கள் தேடுகிறார்கள்" என்றான்.

அவளுக்கு விளங்கவில்லை.

அவன் ஒரு நாளும் எந்த இயக்கத்திலும் சேர்ந்திருக்கவில்லை.அது தான் பிழை.

அவன் பயத்துடன் வாசலைப் பார்த்தான்.

அவனூரில் அவன் இருக்க முடியாதாம். அவள் கொடுத்த சாப்பாட்டை சாப்பிட்டபடி சொன்னான். சத்தியாவில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் முன் பின் தெரியாத ஒருத்தனுடன் வாழ்வதாக அவளை ஊர் தூற்றும் என்று

www.tamilarangam.net

தெரியும். அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

பக்கத்து வீட்டு வேலிகளுக்குக் காதும் கண்களும் கிடைத்து விட்டது. ஊருக்கு வாய் திறந்து கொண்டது.

ஊரில் பெரிய மனிதர்கள் அவளைப் பார்க்க வந்தார்கள். அவள் 'நடத்தை' பற்றி அடுத்த வீடுகளில் நல்ல அபிப்பிராயம் இல்லை என்றார்கள்

அவள் வாயடைத்துப் போய்விட்டாள். குழந்தைகளும் அவளும் பட்டினியாற் துவண்டபோது இல்லாத அக்கறை இப்போது 'யாரோ' ஒருத்தன்(!) அவள் வீட்டில் வந்தபோது வந்துவிட்டதாம்!.

"இதெல்லாம் பொய்க்கதை. என்னில சந்தேகம். தட்டப் போறான்கள்" பாலேந்திரன் முணு முணுத்துக் கொண்டான். பாவம் அவன் முணு முணுப்பு முடியமுதல் சில விடுதலை வீரர்கள் வந்து "கொஞ்ச நேரம்" கதைக்கக் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். அவர்களின் கொஞ்ச நேரத்துக்கு உண்மையான விளக்கம் பாலேந்திரனின் ஆயுள்காலம் என்பது சத்தியாவுக்குப் புரியாமலில்லை.

விடுதலைவீரர்களுடன் வந்திருந்த ஒரு பிரமுகர் அவளைப் பார்க்க வந்தார். அவள் அழகு ஏழ்மையுடன் அழிந்து போகவில்லை. சோகத்திலும் ஒரு அழகு. பிரமுகர் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தார். பாலேந்திரன் போல ஆட்கள் மக்களின் துரோகி என்றார்.
அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டு நின்றாள்.
அவர் குரல் இரக்கமாயிருந்தது.
பாலேந்திரனைப்பற்றி அவர் சொல்லச் சொல்ல அவளுக்கே இதுவரை பாலேந்திரனில் வைத்திருந்த நம்பிக்கை சந்தேகமாக இருந்தது.

"உனக்கு பாலேந்திரன் தங்களின்ரை ரகசியம் ஏதும் சொன்னானா?"

"ரகசியம் சொல்லுமளவுக்கு எனக்கும் பாலேந்திரனுக்கும் நெருங்கிய பழக்கமில்லை" அவள் அழுகையினூடே சொன்னாள்.
பாலேந்திரன் அவளின் கணவனின் நண்பன், அவள் பட்டினிக்கு ஏதோ

www.tamilarangam.net

ஒன்றிரண்டு உதவி செய்தவன்.

பிரமுகர் நிலவு வெளிச்சத்தில் அவளைப் பார்த்தார்.
அவளின் முகம் அவருக்குச் சரியாகத் தெரியவில்லை.
"குழந்தைகள் எப்படி" அவர் குரலில் இரக்கம்; நடிப்போ உண்மையோ என்று அவளால் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

"செலவுக்கு வைத்துக் கொள்" புது நோட்டுகளைக் கையால் அவள் தொட்டு எத்தனையோ காலமாகி விட்டது.
நிலவு ளிச்சத்தில் புது நோட்டுகள் மோகனமாய்ச் சிரித்தன.
நீண்ட நேரம் அவள் தயங்க, அவர் குழந்தைகள், பட்டினி, பாவம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கக் கடைசியாக அவள் அழுது விட்டாள்.

"உன்ர புருஷன் எங்களோட கொழுவ வந்த ஆள்" பிரமுகர் இறந்த காலத்துக்கு அவள் நினைவை இழுத்தார். அவளுக்கு நடராஜன் யாருக்கும் பிடிக்காமல் நடந்ததாக ஞாபகமில்லை.அவர் மிகவும் மெல்லிய குரலில் தேசக் கடமை, மக்கள் கடமை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்.
புது நோட்டுக்கள் கல்லின் பாரத்திலமர்ந்திருந்து கண்ணடித்தன.

அவர் போய்விட்டார்.
குழந்தைகள் புது உடுப்பு போட்டன. அவள் அடுத்த நாளைக்குச் சாப்பாட்டுக்கு யோசிக்கவில்லை. அதன்பின் அவர் அடிக்கடி வந்தார். வீட்டுத் திண்ணை தாண்டி உள்ளுக்கும் வந்து விட்டார்.
அவள் இன்று அவருக்காகக் காத்திருப்பது போல் காத்திருக்கத் தொடங்கி விட்டாள்.

அவர் ஊர்ப் பிரமுகர்களில் ஒருத்தர். இயக்கத்தில் ஒரு பிரமுகர். குழந்தை குட்டிகளுக்குத் தகப்பன்.
இரவில் வந்து போனார்.
அடுத்தவர்கள் அவள் நடத்தையில் இன்னும் சந்தேகம் என்றும் இயக்கம் இந்த மாதிரி விடயங்களில் மிகக் கடுமையாக இருப்பதாகவும் சொன்னார்.

அவள் அவர் என்ன சொல்கிறார் என்று புரிந்து கொண்டாள். இனி இந்தப்

www.tamilarangam.net

பக்கம் வராவிட்டால் நல்லது என்று அரை குறை மனத்துடன் சொன்னாள்.
அவர் ஒன்றிரண்டு கிழமையாக வரவில்லை.
அவள் காத்துக் கொண்டேயிருக்கிறாள்.

இருளில் ஏதோ சலனம். யாரோ கிணற்றடியில் நிற்பது போன்ற பிரமை. அவரைத் தவிர யாரும் இந்தப்பக்கம் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை.
"நீங்களா"
அவள் மெல்லக் கேட்டுக் கொண்டு போனாள். ஒரு வெடிச்சத்தம். அவள் துவண்டு விழுந்தாள்.
அடுத்த நாள் இயக்கக்காரர் வந்து நடத்தை கெட்ட இந்தப் பெண்ணைக் கையும் களவுமாய்ப் பிடித்து மரண தண்டனை கொடுத்து விட்டதாகச் சொன்னார்கள்.

அரை குறை நித்திரையில் தானெழும்பும் போது அம்மாவுடன் சேர்ந்திருந்த பிரமுகர் இன்று பக்கத்து வீட்டுப் பத்தினிகள் பார்த்திருக்க அம்மாவின் மரணத்திற்கு நியாயம்.

www.tamilarangam.net

## க.கலாமோகன்

# ஓர் இலையுதிர்காலத் தொடக்கமும் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும்

இறங்க வேண்டிய இடத்தையும் கடந்து ஓடிக்கொண்டிருந்தது ரயில். நான் தூங்கிக் கொண்டிருந்தேன். எப்போதோ இறங்கியிருக்க வேண்டும் என்பது திடுக்கிட்டு விழித்த போதுதான் தெரியவந்தது. ரயிலின் முடிவிடம் நான் இறங்க வேண்டிய இடம் அல்ல. அதனை அடைய அரை மணி நேரமாவது எடுக்கும். அதற்குள் வரும் ஸ்டேசனில் இறங்கும் எண்ணம் இல்லை. அது ஓர் தனித்துப் போன ஸ்டேசன்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலாமோகன் இன்று தீவிரமாக எழுதிக்கொண்டிருக்கும் புகலிடவாழ்வியல் எழுத்தாளர்களில் முதன்மையானவர். 'வீடும் வீதியும்' நாடகநூல் தமிழகத்தில் வெளியானது. சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம், விமர்சனம் என்று பலதுறைப் படைப்பாளியான இவர் ஒரு தேர்ந்த பத்திரிகையாளர். கலாமோகனின் பிரான்சியமொழிக் கவிதைகள் சிறப்பானவை. இவரது சிறுகதைகள் பல தமிழுக்குப் புதுப்பொருளை புதுவடிவில் சொல்கின்றன. 'குளிர்' சிறுகதைத் தொகுப்பு விரைவில் வெளிவரவிருக்கிறது.

www.tamilarangam.net

பகலில் கூட ஜனநடமாட்டத்தைக் காணமுடியாது. ஸ்டேசனுக்குப் பின்னால் உள்ள பரந்த வயல் வெளி, இருளில் எனது உடலை உறைய வைத்துவிடும். மழை வேறு பெய்து கொண்டிருந்தது. முடிவிடம், வளர்ச்சியடைந்து வரும் ஒரு நகரமாக இருந்ததால் அங்கேயே போய் இறங்கி, இரவை ரயிலினுள் கழிப்பதென முடிவெடுத்தேன். சில வருடங்களின் முன் DREUX என்ற அந்த இடத்திற்கு வேலை தேடிப்போன அனுபவம் எனக்கு உண்டு. அங்கே ஒரு சில ஹோட்டல்கள், மூன்று நான்கு BARகள், பிரமிப்பூட்டத்தக்கது எனச் சொல்லமுடியாத ஜனநடமாட்டம் என்பன இருந்தன. பகலில் கண்ட நகர், இரவிலும் அப்படியேயிருக்குமா எனக் கேட்டுக் கொண்டபடி மீண்டும் தூங்க வெளிக்கிட்டேன். இறங்குமிடத்தைத் தவற விட்டதால் தூக்கம்வர மறுத்தது. தூங்குவதும் விழிப்பதுமாக நேரம் போயிற்று. எனக்கு முன்னேயுள்ள ஆசனங்களிலும் சிலர் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களும் என்னைப் போல இறங்குமிடத்தைத் தவற விட்டவர்களா? முடிவிடம் வந்தால் தான் தெரியும். இன்னும் சிறிது தூரத்திலுள்ள ஆசனமொன்றில் ஆபிரிக்க வாலிபன் ஒருவன், 18 வயது இருக்குமாப் போல் தெரிந்த ஒரு பிரெஞ்சுக்காரியினைக் கட்டியணைத்து இன்பம் துய்த்தவண்ணம் இருந்தான். கைக்கடிகாரத்தைப்பார்த்தேன். இன்னும் சில நிமிடங்களில் முடிவிடம் வந்துவிடும். விழிகளை யன்னல் வழியாக வெளியே விடுகின்றேன். நகர் தூரத்தில் தென்பட்டது. இருளில் மூழ்கியும், மழையால் நனைந்தபடியும். வெளியே சென்று மழையில் நனைவதைக்காட்டிலும் ரயிலினுள் தூங்குவதுதான் உத்தமம் என மீண்டும் முடிவெடுத்தேன்.

முடிவிடம் வந்தது. தூங்கியபடி கிடந்தோர் இயந்திர மனிதர்களைப்போல திடுதிப்பென விழித்து இறங்கினர். ஆபிரிக்கனும் அவனது காதலியும்தான். இறங்கிக் கொண்டிப்ருபோரைத் தூங்கும் விழிகளால் சில நிமிடங்கள் நோக்கினேன். ஸ்டேசனுக்கு வெளியே வாகனங்கள் இரைவதைக் கேட்டதும், மணியைப் பார்க்க அது இரவு 1.32 காட்டியது. வாகன இரைச்சல் முடிந்ததும் நிசப்தம். ரயில் நிலைய விளக்குகளும், ரயிலினதும் கூட அணைந்தன. நான் மட்டும் தனியே. தூங்குவதற்கு என்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்த போது தான் அந்தச் சத்தம் கேட்டது. அதுவும் ரயிலினுள்.

"வள்...வள்...வள்..."

www.tamilarangam.net

நடுங்கினேன். விழித்து, தூரத்தே பார்த்த போது.... நாயுடன், ஒரு கட்டையான வெள்ளை உருவம் என் பக்கமாக நகர்ந்தபடி....

"ஏய்! இங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?" அவன் என்னை அதட்டினான்.

"இறங்குமிடத்தைத் தவறியதால், தவறுதலாக இங்கே வந்து விட்டேன்; வெளியே மழை பெய்கின்றது; குளிராகவும் இருக்கின்றது; இது கடைசி ரயிலாகவிருப்பதால், காலையில் முதல் ரயில் எடுக்கும் வரை, இந்த ரயிலினுள் தூங்க என்னை அனுமதிப்பீர்களா?"

"ரயில்களில் தூங்குவது தடுக்கப்பட்டுள்ளது. நீ உடனடியாக வெளியேறு. வெளியே போய் நில்."

"வெளியே மழை பெய்கின்றது."

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் ரயில்களின் இரவுக் காவலன். நீ உடனடியாக வெளியேறு!"

நாயைக்காட்டிலும், அவனது முகம் எனக்குப் பயத்தை ஏற்படுத்தியதால் இறங்கினேன். வழி காட்டப்பட்டது, வெளியே போவதற்காக.

"ரகசியமாகக்கூட, மீண்டும் ரயிலினுள் நுழைய எத்தனிக்காதே! இந்த நாயோடு தான் நான் ரயில்களைக் கண்காணிப்பதுண்டு. மீண்டும் நான் உன்னை இங்கே கண்டால், நாய் உன்னைச் சாப்பிட்டு விடும்... கவனம்..."

காவலனின் கடைசி எச்சரிக்கையை நான் பரி பூரணமாக விளங்கிக் கொண்டேன். நாய்க்கு நன்றி சொல்லியபடி, ரயில் நிலையக் கதவைக் கடந்த போது "நீ உள்ளே வந்தால், நாய் தான் உன்னைச் சாப்பிடும்" என்று சொல்ல அவன் தவறவில்லை.

நான் இப்போது வெளியே. ஒரு ஆபிரிக்கனும் இரண்டு வெள்ளையர்களும் அங்கே நின்றனர். என்னைப் போல இவர்களும் இறங்குமிடத்தைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவறவிட்டவர்கள் என நினைத்த போது ஆறுதலாகவிருந்தது. அவர்கள், என் பக்கம் திரும்பி சில வார்த்தைகளையாவது பேசும் ரகத்தினர் போலப்படவில்லை.

ஐந்து நிமிடங்களின் பின்னர், ஒரு வாகனம் வந்து ஆபிரிக்கனின் முன் நின்றது. கதவு திறபட்டதும், அவன் தனது பாஷையில் பேசியபடி, பூரித்த முகத்துடன் அதனுள் ஏறிப் போய்விட்டான். கொடுத்து வைத்தவன் என எனது உதடுகள் முணு முணுத்தன.

இப்போது நானும் இரண்டு வெள்ளையர்களும். அவர்களில் ஒருவன் முன்னேயிருந்த தொலை பேசிக்கூடத்துள் நுழைந்து பேசுவது எனக்குத் தெளிவாகவே கேட்டது.

"நாங்கள் ஸ்டேசனுக்கு முன்னே நிற்கின்றோம். விரைவாக வா. மழை வேறு பெய்கின்றது"

இன்னும் சில நிமிடங்களில் அவர்களையும் காவிச்செல்ல வாகனம் வந்து விடும். அவர்கள் போய் விடுவார்கள். நான் மட்டும் தான் தனித்து நிற்பேன். பயம் என்னை பிராண்டியது. ஹோட்டல்கள், BAR கள் அனைத்தும் மூடிக் கிடந்தன. வாகனமொன்று வந்து இரண்டு வெள்ளையர்களையும் கூட்டிச்சென்றது.

ரயில் நிலைய முகப் பொன்றில் மழைக்கு ஒதுங்கித் தனியாக நிற்கின்றேன். நேற்றைய இரவில் தூக்க நினைவுகள் ஒரு தடவை வந்து போயின. வயிற்றில் பசிப்புகை வேறு எழுந்தது. விடியும் வரை குளிரில் நடுங்கியபடி தனித்து நிற்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இப்படி நான் நினைத்த போது தான் காலடிச் சத்தங்கள் சில என் காதில் விழுந்தன. மீண்டும் காவலன், நாயுடன் என்னை விரட்ட வருகின்றானா?

இல்லை. அது இரண்டு மனிதர். ஒருவனுக்கு 24, மற்றவனுக்கு 36 வயதுகள் இருக்கலாம். இருவரிடமும் வீதிகளில் வாழப்பழகி விட்டவர்கள் போன்ற தோற்றம் பளிச்சிட்டது. நான் வலிந்து பேசினேன்.

"ரயிலைத் தவறவிட்டீர்களா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆம், சிறிது உலாவிவிட்டு இங்கே வந்துள்ளோம்"

"உனக்கு வீடில்லையா?" இது மகமட்.

"வீடு உள்ளது, ரயிலைத் தவற விட்டு விட்டேன். உனக்கு வீடு உள்ளதா?"

"நாளை காலையில் முதல் ரயில் எடுத்து, வீடு சென்று சுகமாகத் தூங்க வேண்டும்" எனப் பதிலை முந்தித் தந்தான் நிசார். இருவரது அசைவும் இவர்கள் வீதிகளில் வாழ்பவர் என்பதையே எனக்குக் காட்டியது. பொய் சொல்கின்றீர்களா? பரவாயில்லை. இந்தக் கணத்தில் நானும் அவர்களும் வாழும் யதார்த்தம் ஓர் அர்த்தம் கொண்டது.

சிகரட் ஒன்றைப்பற்ற வைத்தபடி பக்கெட்டை மகமட் முன் நீட்டியபோது, "குளிரில் புகைத்தல் நல்லது, நன்றி" என்ற குறிப்புடன் எடுத்துக் கொண்டான். நிசார் எடுக்கவில்லை. நிசார் திடுதிப் பெனத் துள்ள வெளிக்கிட்ட போது, "ஏன் இப்படித் துள்ளுகின்ருய்?" எனக் கேட்டேன். "துள்ளினால், குளிர் தெரியாது" எனப்பதில் வந்தது.

"ஹோட்டல் ஒன்று தேடித்தான் உலாவச் சென்றோம்" என மகமட் சொன்னபோது, நிசார் அவனது பிடரியில் ஒரு தட்டுக் கொடுத்து விட்டு "உன்னிடம் என்ன காசு இருக்கின்றதா?" எனக் கேட்டான். மகமட் முகத்தில் அசடு வழிந்தது.

என்னிடமிருந்த கடைசிச் சிகரெட்டைப் பற்ற வைத்தேன். மேலதிகமாக 'ரபக்' தூள் வேறு இருந்தது. அதனைச் சுருட்டித்தான் பற்றவைக்க வேண்டும். ஏதோ, புகைப்பதற்கு இதுவாவது உள்ளதே என ஆறுதல் அடைந்து கொண்டேன்.

நேரம் இப்போது 2.30. ஒரு சிகரெட்டைச்சுருட்டி மகமட்டிடமும் நிசாரிடமும் நீட்டினேன். பெற்றுக் கொண்டனர். நானும் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டேன். புகையிலைச் சாயம் புகை வழியாக உதட்டில் ஒட்டியதால் நாவால் உதட்டை ஈரமாக்கிய போது கச்சலாக இருந்தது. இரண்டு மூன்று 'தம்' களை இழுத்த பின்னர் அதனை எறிந்தேன். மகமட் அதனை விடவில்லை. எடுத்துக் கொண்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இஸாபெல் எனது காதலி!" இது நிசார்.

"ஓ! அவள் எனக்குத்தான். நேற்றுக் கூட அவளுடன் BAR ல்குடித்தேன்" மகமட் இது.

"உனக்குத் தெரியுமா, போன வெள்ளி அவளுடன் நான் கிடந்தேனென்று?"

"இல்லை, நீ பொய் சொல்லுகின்றாய்"

"இல்லை,இல்லை நான் சொல்வது உண்மை. அவள் என்னைத்தான் காதலிப்பதாகச் சொன்னாள்".

இசாபெல், உன்னைக் காதலிக்கமாட்டாள். அவள் எனக்கு."

"நீ அவளைக் காதலிக்கின்றாய் என்ற விஷயத்தை நான் அவளது கணவனுக்குச் சொல்லி விடுவேன். இருவரும் காதலிப்போம், யார் வெல்கின்றார் என்பதைப் பார்ப்போமே?"

"உன்னிடம் கெஞ்சிக் கேட்கின்றேன், என்னை மட்டும் அவளைக் காதலிக்க விடு..."

"அது சரி, அவளுடன் நீ கிடந்தாயா?"

"ஹ...ஹ..."

நிசார், மீண்டும் மகமட்டின் பிடரியில் ஒரு அடி போடுகின்றான். அதன் பின், "சரி, நீ அவளைக் காதலி" என்ற படி ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைக்கும்போது,"எனக்கும், ஒன்று தா" எனக் கேட்கின்றான் மகமட்.

"என்னிடம், ஒரேயொரு சிகரட் மட்டும் தான் இருந்தது. அதைப் பற்றவைத்துவிட்டேன். வேறு எதுவும் இல்லை".

www.tamilarangam.net

"இல்லை, உன்னிடம் ஒரு பக்கெட் இருந்ததைக் கண்டேன்"

"அதற்குள் கிடந்த கடைசிச் சிகரெட்டைத்தான் நான் இப்போது புகைத்துக் கொண்டுள்ளேன்."

இவர்களது சம்பாஷணை விநோதமானதாகவும், விநோதமில்லாததாகவும் எனக்குப்பட்டது. ஒரு சிகரெட்டை உருட்டி மகமட்டிடம் கொடுத்த பின்னர் நேரத்தைப் பார்த்தேன். 3.00.

"குளிராகவுள்ளது. நடந்தால் சிறிது சூடாகவிருக்கும். நடப்போமா?" இது நான்.

இருவரும் தலையை ஆட்டி ஓம் போட்டனர். நாம் உலாவ வெளிக்கிட்டோம். வீதி விளக்குகளின் ஒளியிலும் மழைத் தூறலிலும் சூடு தேடி.

ரயில் நிலையத்தின் முன் ஒரு நீண்ட வீதி. அதில்தான் நாம் நடந்தோம். புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடம் ஒன்று கதவுகள் அற்றுக் கிடந்தது. உள்ளிட்டோம்.

"மழையிலிருந்து தப்ப இது நல்ல இடம். இங்கேயே ஸ்டேசன் திறபடும்வரை இருப்போம்." இது நான்.

அவர்கள் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. சீமேந்து பூசப்படாத தரையில் குந்தினோம். மெல்லிய குளிரை எம்மீது இதமாகவும் இதமில்லாமலும் வாரிக் கொண்டுவந்த போதும் தூங்கலாம் போலிருந்தது. ஜாக்கெட்டால் தலையை இழுத்து மூடிக்கொண்டு சரிந்தேன். மெல்லிய சூடு ஜாக்கெட்டினுள் பரவியது. 1/4 மணிநேரம் கழித்து விழித்த போது, எனக்கு அருகில் மகமட்டையும் நிசாரையும் காணவில்லை. எங்கே போய்விட்டார்கள்?

எனது இரவின் துணைகளைத்தேடி அலைய வெளிக்கிட்டேன். மழை தூறிக்கொண்டுதான் இருந்தது. புகைக்க ஆசை. சுருட்டும் பஞ்சி விடவில்லை. இவர்கள் எங்குதான் போய்த் தொலைந்தார்களோ! வெறிச்சோடிக்கிடந்த வீதியில் தனியாக நடப்பது பயத்தையூட்டியது. ரயிலில் மட்டும் கண்ணயர்ந்து போயிருக்காது விட்டால் றூமில் எவ்வளவு சுகமாகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூங்கியிருக்கலாம். சரசரப்பொன்று கேட்டு விழிகளை அருகே திருப்பினேன். ஒரு கட்டிடத் தாழ்வாரத்தில் எனது இரவின் துணைகள் நின்று கொண்டிருந்தன. மறு மூலையில் ஒரு பெண். 48 அல்லது 49 வயது இருக்கலாம். கைகளால் உடலை இறுக அணைத்தபடி-எங்கோ வெறித்துப் பார்த்தபடி அவளது விழிகள். அவளும் ஒரு வேளை ரயிலைத் தவற விட்டவளாக இருக்கலாம்.

"ஏன், அங்கே தூங்காமல் இங்கே வந்தீர்கள்?"-இது நான்.

வெகுளித்தனமாகச் சிரித்தான் மகமட். நிசாரின் கடைக்கண் பெண்ணைப் பார்த்தபடி.

"அவளுடன் நான் உடலுறவு கொள்ளப் போகின்றேன்" நிசார் நெஞ்சை நிமிர்த்தியபடி சொன்னான்.

"இல்லை, அது நான்..." என முந்தினான் மகமட்.

"சரி, நீ அவளுடன் முதலில் உடலுறவில் ஈடுபடு. அதன் பின் நான்..." என்றபடி, அவனது பிடரியில் மீண்டும் செல்லமாகத் தட்டிவிட்டு தாழ்வாரத்தை விட்டு வெளியே வந்த நிசாரை நான் பின் தொடர்ந்தேன்.

நாம் மீண்டும் அந்தச் செப்பனிடப்படாத கட்டிடத்துக்கு வந்து விட்டோம். நிசார் என்னுடன் பெரிதாக எதனையுமே பேசாமல் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். எனக்கும் ஒரு சிகரெட்டை நீட்டுதல் நாகரிகமென அவன் நினைக்கவில்லை போலும்.

"யார் அந்தப் பெண்?"-இது நான்.

"எங்களைப் போலத்தான்."

"ரயிலைத் தவறவிட்டவளா?"

"தெரியாது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பாஷணை தொடருமுன் மகமட் வந்து விட்டான்.

"அவளுடன் உடலுறவு செய்து விட்டாயா?"-இது நிசார்.

"இல்லை, கேட்டேன். தனக்கு விருப்பமில்லையென்று விட்டாள். அவள் ஒரு கிழவி."

"பார், நான் உடலுறவு செய்து விட்டு வருகின்றேன்." என்றபடி நிமிர்ந்த நெஞ்சோடு வெளிக்கிட்ட அவனிடம், மகமட் சிகரெட் கேட்கின்றான். இப்போதும் இல்லையென்றுதான் பதில்.

நானும் மகமட்டும். புகையிலைச் சரையை எடுத்து அவன்முன் நீட்டுகின்றேன்.

"எனக்குச் சுருட்டத் தெரியாது."

சுருட்டிக் கொடுத்தபோது,தன்னிடம் நெருப்பு இல்லையென்றான். லைட்டரால் மூட்டிவிட்டபோது அவன் முகத்தில் ஒரு மினுக்கம் தெரிந்தது.

போன வேகத்திலேயே நிசார் வந்துவிட்டான்.

"சரி, விஷயத்தை முடித்து விட்டாயா?"

"அவள் கிழவி. எனக்கு விருப்பமில்லை."

இருவரும் தூங்கும் விருப்பற்றவர்கள் போல பட்டனர். நிசார் தனது பிருஷ்டத்தைத் தட்டியபின் மகமட்டினதையும் தட்டிவிட்டான். இருவரும் ஹோமோசெக்சுவல்களாக இருக்கலாம் என எனக்குப்பட்டது.

தான் ரயில் நிலைய முகப்புக்குப் போவதாகச் சொல்லியபடி நிசார் இறங்கினான். "கதவு 4.30 மணிக்குத் தான் திறபடும். இன்னும் 1மணி நேரம் இருக்கின்றது" என்றான் மகமட். இதற்குச் செவிமடுக்காமல் இறங்கிய நிசாரின் கால்கள் பெண் ஒதுங்கியிருந்த பக்கமே நடக்க வெளிக்கிட்டன. சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிமிடங்களின் பின்னர் நானும் மகமட்டும் அவன் பெண்ணுடன் என்ன செய்து கொண்டிருக்கின்றான் என்பதைப் பார்க்க வெளிக்கிட்டோம்.

அங்கே பெண்ணும் அவனும் தனிமையாக இரு வேறு மூலைகளில் நின்றனர். நான் அவளைப் பார்த்தேன். பரிதாபமாக இருந்தது. சிறுவனாக இருந்தபோது அடிக்கடி கண்டு பயந்து நடுங்கிய ஒரு தமிழ் விசரியின் பிரதிபிம்பம் போல அவள் எனக்குப்பட்டாள். நாங்கள் எதுவுமே பேசவில்லை. நிசப்தம். பொலீஸ் வாகனம் ஒன்று எங்களைக் கடந்த போதும் நாம் அப்பாவிகள் என்று கருதியது போல நிற்காமல் விரைந்தது. தனிமையில் அதுவும் இந்த இரவில் ஒரு பெண். இவள் நிச்சயமாகத் துணிச்சல் கொண்டவளாக இருக்க வேண்டும். மகமட் கொட்டாவி விட்டான். எனக்குப் பசித்தது. நிசார் சிகரட் ஒன்றைப் பற்ற வைத்தபோது மகமட் தனக்கும் ஒன்று கேட்டான். அப்போதும் நிசாரிடம் சிகரெட் "இருக்கவில்லை." இருவரது உறவும் விநோதமாக எனக்குப்பட்டாலும், அவர்கள் இறுக்கமான சிநேகிதர்களாக இருக்கலாம் போல தெரிந்தது.

"சூடாக இல்லையல்லவா!"-இது பெண். முதல் தடவையாக அவள் இப்படித்தான் பேசினாள். இதன் பின் அவள் பேசவேயில்லை.

நான் அவள் பக்கம் திரும்பி, "ஆம், சூடாக இல்லைத்தான். இது இலையுதிர்காலம். குளிரின் தொடக்கம். மழை வேறு பெய்கின்றது." என்றேன். பதில் வரவேயில்லை. நிமிடங்கள் கழிகின்றன. மணி காலை 4.20. இன்னும் 10 நிமிடங்களில் ரயில் நிலையக்கதவு திறபட்டுவிடும். ரயில் நிலையத்துக்குப் போவோமா என இருவரையும் கேட்கின்றேன். "இல்லை, நாம் பின்பு வருகின்றோம்" என்கின்றனர். நான் இறங்குகின்றேன்.

நிலையத்தை அடையும்போது 4.28. இன்னொரு இரவுக்காவலன் 2 நிமிடங்கள் முந்தி வந்து கதவைத் திறந்து விட்டான். காத்திருப்போர் மண்டபம் சூடாகவிருந்தது. நான் முதல் ரயில் எப்போது என்பதை நேரப்பட்டியலில் தேடினேன். அது 5.32ற்கு. இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டும். பசித்தது. இனிப்பு வகைகள் மட்டுமே காசு போட்டு எடுக்கும் பெட்டிக்குள் இருந்ததால் முதல் ரயில் எடுத்து றூம் போய்ச் சேர்ந்ததும் முதல் வேலையாகச் சாப்பிடுவோம், அதன் பின் தூங்குவோம் என முடிவெடுத்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சனிக்கிழமை விடுமுறை தினமாக இருந்தபோதும் வேலைக்குச் செல்வோர் சிலர் முதல் ரயில் எடுக்க தூங்கும் விழிகளோடு வந்து கொண்டிருந்தனர். 4.30 போலதான் வந்தனர் எனது இரவின் துணைகள். கடிகாரத்தின் சின்ன முள் எப்போது 5 இலும் பெரியமுள் எப்போது 32 இலும் வரும் என்பதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

5.22 போல முதல் ரயிலின் விளக்குகள் எரிந்தன. காத்திருந்தோர் ஓடிப்போய் அதனுள் புகுந்தனர். நானும் ஒரு பெட்டிக்குள் ஏறிக்கொண்டேன்.

எந்தப் பெட்டிக்குள் நான் ஏறினேனோ அதற்குள்தான் சில நிமிடங்களின் பின்னர் எனது இரவுத் துணைகள் ஆடி,ஆடி வந்து ஏறிக்கொண்டனர்.

"நல்ல சூடாக இருக்கின்றது" என்றபடி மகமட் தூங்க வெளிக்கிட்டான்.

"நான் அவளுடன் உடலுறவு செய்து விட்டேன்" என்றான் நிசார்.

நானும் தூங்க வெளிக்கிட்டேன். முதல் ரயிலில் ஏறியாயிற்று. இறங்குமிடத்தைத் தவறவிட்டாலும் இன்னொரு ரயில் பிடித்து நாம் போய் சுகமாகத் தூங்கலாம் என்ற நம்பிக்கையோடு.

www.tamilarangam.net

**சுகன்**

# ஒரு சனிக்கிழமை பின்னேரம்

சனிக்கிழமை நேரத்திற்கு வந்து அப்பிள் தோல் சீவிக்கொண்டிருந்த நான் BARல் வேலை செய்யப் போய்க் கொண்டிருக்கும் சில்வியை வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டிருக்கும் மொலூத் கிழவனை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தேன்.
சில்வியின் அழகில் கிழவன் எப்போதும் வாயூறித்தான் போய்விடுகிறான்.
"இவளின் வடிவுக்கு.ஒரு நாள்....."
என்றபடி கிழவன் எனது தலையைத் தடவினான்.
கொக்கத்தடிக்கு குறைவான உயரம். இளமையில் திடகாத்திரமான அழகு கந்தர்வனாக இருந்திருக்க வேண்டும்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுகன் தற்போது பாரிஸில் வாழ்கிறார். பள்ளம் என்ற சிறுசஞ்சிகையில் வெளியான 'பஞ்சமியில் செத்தவர்களும் வாழ்வும்' என்ற இவரது முதல் சிறுகதை சீரிய விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தது. இவரது சிறுகதைகள், குறுநாடகம், கவிதைகள், விமர்சனங்கள் புதுப்பாணியிலமைந்தவை.புகலிடக் கவியுலகில் இவரின் தடங்கள் தனித்துவமானவை. கிராமியப் பேச்சு, வாழ்வு என்பனவற்றைச் சுவைபட எழுத்தில் பயன்படுத்துபவர். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கத்தின் முக்கிய கலைஞராக பாரிஸில் இயங்குபவர்.

www.tamilarangam.net

அவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தந்தையுடன் வாழ இங்கு கொடுத்து வைக்கவில்லை என்று நான் வருந்துவதுண்டு. தூரத்துத் தண்ணீர் தாகத்துக்கு உதவாது என்பது மொலூாத் கிழவனின் தத்துவம் போலும். அல்ஜீரியாவின் கபில் இனத்துக் கிழவன் இங்கு பிலிப்பைன்ஸ் மனிஷி ஒன்றை வைத்திருக்கிறான். விபச்சாரம் செய்யும் அல்ஜீரியப் பெண்ணும் கிழவனைத்தேடி ரெஸ்ரூரண்டுக்கு வருவதுண்டு. அவளுடைய ரெலிபோன் நம்பரை எனக்கு ஏற்கெனவே தந்திருந்தான். இப்போது சந்தோஷமாக இருக்கும் கிழவன்,இன்னும் கொஞ்ச நேரத்தில் நாயாகி விடுவான். அவனது எதிரிகள் சனிக்கிழமை பின்னேரம் ரெஸ்ரூரண்டுக்கு சாப்பிட வருபவர்கள்தான்.

"ஒரு நாளைக்கு விளக்குமாறு எடுத்துத்தான் எல்லாருக்கும் வெளுப்பேன்" என்று சொன்னால் அது சனிக்கிழமை பின்னேரம்தான்.

ஜப்பானிய சுற்றுலாக்குழு ஒன்று இன்று ரெஸ்ரூரண்டில் பதிவு செய்திருந்தது. கிழவன் இன்று நிலத்தில் விழுந்து விடுவான்.

'சலோ', 'கொனார்', 'பெதே' என்று 'செவ்'வைப் பேசிக் கொண்டே இருந்தான். செவ்வும், பத்திரோனும் 'கம்பி'க்காரர்கள் என்று கையால் செய்து காட்டினான். அவன் செய்து காட்டிய விதத்தில் பத்திரோனும் செவ்வும்கூட அப்படிச் செய்வார்கள் என்பது சந்தேகமே. செவ்'பற்றிக்ஸ்' இளம் பெடியன்; கிழவன் பேசுவதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே வேலைக்கு வந்தான்.

நேரே என்னிடம் வந்து "உன்ர சிநேகிதன் ஆரையும் இண்டைக்கு பிடிக்க முடியுமா கழுவுறதுக்கு"

"ரெலிபோன் அடித்துப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு சாந்தகுமாருக்கு அடித்தேன்.

"இப்ப கழுவவாறியா ரெஸ்ரூரண்டுக்கு" என்று கேட்க

"விசா கேட்பானோ?"என்றான் சாந்தன்

"ரதி மச்சியின்ர விசாவை வாங்கிக் கொண்டு வா" என்றேன்.

"பகிடியை விட்டிட்டு சொல்லுங்கோ அண்ணை. விசாவில்லாமை உங்கை செய்யலாமோ" என்றான்.

"உன்ர விசா இங்கை செல்லாது." என்றேன்.

சாந்தன் எல்லோருக்கும் பாஸ் எழுதிக் கொடுத்துவிட்டு தனக்கும் ஒன்று எழுதிக்கொண்டு போன மாதம் வந்தவன்.

சாந்தன் வர கிழவன் சிரித்தான். சாந்தன் முதலாவது கோப்பையை போட்டுடைக்கும் போது எல்லோரும் சிரித்தார்கள். சாந்தன் பயந்து போய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னைப் பார்த்தான். கிழவன் "மிகவும் நல்லது" என்றான் . நரகத்தில் இடர்ப்பட்டோம். வேலை முடிந்தது.

"கடைசி றெயின்தான் இண்டைக்குப் பிடிக்கலாம். எல்லாத்தையும் தொட்டியுக்கை அடுக்கிப்போட்டு மிசினை நிப்பாட்டிப்போட்டு வா, நான் நிலத்தைக் கழுவிறன்." என்றேன்.

"......த்த வேலை, பேப்பர் வேலை சம்பளம் குறைவெண்டாலும் வேலை சுகம்" என்றான் சாந்தன்

"ரெண்டு மூண்டு நாளைக்கு கொஞ்சம் கஸ்ரமாத்தானிருக்கும். கடும் சுடு தண்ணியில கழுவாதை, வேலை கூடினா கோப்பையைத் துடைக்காதை, அப்பிடியே தூக்கி அடுக்கு. குட்டுக்கு தன்பாட்டிலை காஞ்சுபோடும். ஜவல் கனக்கப் பாவியாதை, கை எரிச்சுப்போடும். கண்ணுக்கும் கூடாது. தாச்சியின்ர பின்பக்கம் ஒண்டும் கழுவாதை, சும்மா துடைச்சுப்போட்டு தூக்கியெறி" என்றேன்.

அண்ணரும் வேலை முடிந்து கடைசி றெயினுக்கு வந்திருந்தார்.சாந்தனைப் பார்த்துச் சிரித்த அண்ணர்

"எப்பிடி வேலை சுகமோ" என்று கேட்டார்.

"ஓ.... செய்யலாம் " என்றான் சிரித்தபடியே.

நான் இரண்டு பேரையும் விட்டிட்டு தனியே இருந்த சீற்றில் இருந்து நாரியை நிமிர்த்தினேன்.

அன்ன ஆகாரமில்லாமல் காட்டில் கடுந்தவம் செய்துகொண்டிருந்த துருவன்முன் 'உனக்கு என்ன வரம் வேண்டும் ' என்று கேட்டார் கடவுள்.

'உட்காருவதற்கு எனக்கு நிரந்தரமாக ஒரு இடம் வேண்டும். அங்கிருந்து என்னை யாரும் விரட்டக் கூடாது' என்றான் துருவன். அவன் துருவநட்சத்திரமானான்.

நவீன அகதித் துருவர்களால் சில நிமிடத்திற்குள் இருக்கைகள் நிறைந்துவிட்டது. ரெயின் போய்க்கொண்டிருக்கிறது. ஆறுதலாக இருக்கிறேன் என நினைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தேன். இறங்குகிற ஸ்ரேசன் வருகிற நேரமாகிறது என்று மனதிற்குள் நினைக்க அண்ணர் வந்து தட்டினார்.

வழமைபோலவே பிள்ளைகள் நல்ல நித்திரை. ரதி மச்சி முழித்திருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். சற்று முன்னர்தான் கந்தசஷ்டி கவசம் படித்து முடித்திருக்கிறா போல் இருக்கிறது

" பிள்ளைகள் தின்னும் புழைக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக்கண்டால் அலறிக்கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட"

ரதி... என்று வழமை போல் கதவைத் தட்டினார் அண்ணர். நான் உடுப்பை மாற்றி விட்டு குழம்பைச் சூடாக்கினேன். எல்லோரும் சாப்பிட்டுவிட்டு படுத்தோம் ரெலிபோனை இழுத்து விட்டுவிட்டு.

அண்ணர் மச்சியுடன் ஒரு வார்த்தை கதைப்பதற்கு எங்கே ஓய்வு நேரம் கிடைக்கிறது. அதிகாலை வந்து படுத்து காலை எழும்பி ஓடுவதுதான்.
"என்ன நித்திரை வரயில்லையோ...ம்.."
ஒரு வார்த்தை கதைத்தால் அனேகமாக இதாய்தான் இருக்கும்.
அண்ணரின் அறைக்குள் கட்டில் சத்தம் கேட்டது. அல்லது கேட்டது போலிருந்தது. தலகணி கடித்தது. முகத்தில் ஏதோ ஊர்வதுபோல இருந்தது. லையிற்றைப் போட்டு தோச்ச சேர்ட்டால் தலகணியைச் சுற்றிப் போர்த்தினேன். கன்னத்தை அழுத்திப் படுத்தேன். இதமாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ந.சுசீந்திரன்

# புருஷ வீதிகள்

சோசல் காசு கிடைத்ததும் இரண்டு வைன் போத்தல் வாங்கிக் கொண்டேன். தனியாகக் குடிப்பதில் சுவாரஷியம் இருக்காது.
நான் முன்பிருந்த வேலையில்லாதோர் விடுதிக்கு பஸ் எடுத்துப் புறப்பட்டேன். அங்கே தோமாஸ் குப்புறப் படுத்துக் கிடந்தான். முதன்நாட் குடியின் மறுநாளைய மயக்கத்தில் இருந்து அவன் இன்னும் மீளவில்லை. இந்த அதிகாலையில் குடிக்கவும் அவன் மறுத்து விட்டான்.

பக்கத்து அறையைத் தட்டினேன். அவள் இருந்தாள், கூடவே அவள் சினேகிதியும். எனது ஜக்கட்டுக்குள் இருந்து இரண்டு வைன் போத்தலையும் வெளியே எடுத்து வைத்ததும் அவர்கள் சந்தோசப்பட்டிருக்க வேண்டும். இருவரும் ஏற்கனவே குடித்து விட்டிருந்தார்கள். நான் கொண்டு சென்ற போத்தலை மூவரும் பங்கிட்டோம்.

நெடுந்தீவைச் சேர்ந்த சுசீந்திரன் பேர்லினில் வாழ்கிறார். ஜேர்மன் மொழி ஆக்கங்கள் பலவற்றைத் தமிழிற் தந்துள்ள இவர் இலக்கிய விமர்சனத்தில் ஈடுபாடுடையவர். மனித உரிமை மீறல்–, இனவாத எதிர்ப்பியக்கங்களில் ஏனைய வெளிநாட்டு சமூகத்தின் மத்தியில் நன்கு அறியப்பட்டவர். சர்வதேசப் புகலிட இலக்கியங்களின் வரலாற்றுப் பரிச்சயங் கொண்டவர்.

www.tamilarangam.net

ஒருத்தி அழுதாள் ஏன் அழுகிறாள் என்பது புரியவில்லை. குழந்தை, சிநேகிதன், பணம், உடல் உபாதை, பயம் இவற்றில் ஒன்றோ பலவோ மையக் காரணமாக இருக்கலாம்.
குழந்தை பற்றியதாக இருக்க வேண்டுமென்று எடுத்துக் கொண்டேன். எனக்குத் தமிழைத் தவிர எந்த மொழியும் தெரியாவிட்டாலும், எதோவொரு மொழியை நாம் பேசுகிறோம்.

இங்கு வந்த சிறிது நேரத்துக்குள் இந்த சிநேகிதியின் நிர்வாண உருவம் தான் என் மனதுக்குள். அவளோடு உறவுகொள்வதற்கான என் விருப்பத்தின் வெளிப்பாடுகளும், பிரயத்தனங்களும் இங்கு வந்தவுடனேயே தொடங்கிவிட்டன.

அவளும் இசைந்து கொண்டாலும் குடிப்பதை இன்னும் நிறுத்தவில்லை.

"இந்த இடம் சரியில்லை, எனக்குத் தெரிந்த இடம் நகரில் இருக்கிறது, அங்கு போவோம்" என்றாள்.

நகரத்தின் ஜனவெள்ளத்தில் கரைந்து, விரிந்து போய்க் கிடக்கின்ற விலா எலும்புக் கட்டிடக் கோபுரங்களுக்கு முன்னாலும் பின்னாலும் மூத்திரச் சுவர்களின் ஒதுக்குப்புற வெளிகளில் எல்லாம் நாங்கள் அறிந்த முகங்கள்.

அவளால் நடக்க முடியவில்லை. தாங்கலாகப் பிடித்துக் கொண்டு நின்றேன். கையில் இருக்கும் வைன் போத்தலை மட்டும் பிடித்துக் குடிக்கிறாள். அதை வாங்கி அப்பால் எறிந்தேன். இனி அவளால் நடக்கமுடியாது. நான் விட்டால் விழுந்து விடுவாள்.

இடையே என் மனைவி குழந்தை தென்படுகின்றனர், கொழும்பின் சகதித் தெருவொன்றின் குடிசைக்குள்....

சின்ன வயது; இயற்கை கொலுவிருக்கும் எங்கள் கிராமம்; முத்து முத்துக் கனவுகளில் நூறு வருடங்கள் நான் வாழ்ந்தேன். காலம் என்னோடு சேர்ந்து வர மறுத்து விட்டது. நீங்கள் காலத்தோடு கணக்கிட்டால் நான் வாழ்ந்தது சில வருடங்கள். நானே நூறு, இரு நூறு இன்னும் இன்னும் அதிகம் வாழ்ந்து விட்டேன். போதும் என்ற நிறைவு என்னிடத்தில் இல்லை. என் மனைவியை எவ்வாறு பழிவாங்குவது? எத்தனை சந்தர்ப்பங்களில் அவள்

www.tamilarangam.net

என்னை மட்டந்தட்டியிருப்பாள். நான் உடைந்தேன். உருக்குலைந்தேன். என்னுள் இப்போ எதுவும் இல்லை. சில கேள்விகள்?
நான் வாழ்ந்தேனா? வாழ்கிறேனா? எதற்காக? எவ்வாறு?
யாரிடம் எதற்கு நான் என்ன எதிர் பார்க்கிறேன்? என்னை ஆத்மீக உலகுக்குத் தள்ளி இன்னும் இன்னும் பிரயோசனமற்ற மனிதனாக்கப் பார்க்கிறீர்கள்!
கடவுளைப்பற்றி நினைத்தறியாத என் மனதிற்கு மனத்தின் ஆழங்களைப் பற்றி அறியவும் வாய்ப்பின்றி எதுவும் புரியாமல் நட்ட நடுத்தெருவில் நடுநிசியில் நிரந்தரமாக்கி சூனியப் பிரதேசம் சுழன்று என்னை எங்கே கொண்டு செல்லப் போகிறது?

உங்களோடு ஏன் வந்து உறவுகொண்டேன்? நான் உறவு கொண்டால், என்னை ஏன் உங்கள் உலகிற்காக உருமாற்றம் செய்தீர்கள்?. விடுதலையும் தருவதில்லை, விடியவும் விடுவதில்லை. ஏன் இந்த மூர்க்கவதை! வதைக்கும் உலகில், உங்கள் உலகில் உறவு, உண்மை, வாழ்வு, மரணம், பிறப்பு இவையெல்லாம் என்ன கருத்தைக் கொடுக்கிறது?

ஆயிரம் மனிதர்கள் எங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தார்கள். எங்கிருந்து வந்தது எனக்கிந்த வல்லமை! அவளை எப்படியோ நகர்த்தி இரண்டொரு வீடு தள்ளி வீதியோரத்தில் கிடத்தினேன். அது ஒரு வீட்டின் கதவோரம். ஆடைகளைக் கழற்ற முடியவில்லைக் கிழித்தேன்....

ஜன்னல் வழியாக ஒருவன் பெரிதாகச் சத்தம் போடுகிறானா?.
இப்போது என் ஆசையின் வெறி தீர்கிறது. உலகைப் பொசுக்கும் உணர்வு போய்விட்டது; நான் மனிதனல்ல என்று மட்டும் நினைத்துக் கொண்டேன்.
மனிதர்கள் சத்தம் போடுவது இப்போது கேட்கிறது...
எங்களைச் சுற்றி பொலிஸ் வாகனங்களும், கொஞ்சம் மனிதர்களும்
அவள் நிலத்தின் குளிரில் விறைத்துப் போய்விட்டாள். விறைத்த அவளது உடலை வாகனத்தில் ஏற்றுகிறார்கள்.
"உனக்கு அடிக்கவேணும், ஆனால்..." என்று ஒரு பொலிஸ். என்னை அந்தப் பொலிஸ் காரர்கள் துரத்திவிட்டார்கள்.

அவள் இறந்திருக்கமாட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்